Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-31 | 16-09-2004 | வியாழக்கிழமை | ஓசை -211

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:104. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10148)

## உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பமான திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

தியாகி லெப்.கேணல் திலீபனின் பதினேழாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் தாயக நேரம் 9.55 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றி தேசியக்கொடி ஏற்றப்பட்டு ஆரம்பமானது.

இந்நிகழ்வுகள் மாவட்ட மட்டத்திலும் பிரதேச ரீதியாகவும் சிறப்புற ஆரம்பிக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் மாணவர் அமைப்பு நிர்வாகப் பொறுப்பாளர் பாரிமகன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து சிறப்பு மேடையில் அமைக்கப்பெற்ற தியாகி லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

அடுத்து பொதுப் பீடத்திற்கான ஈகச்சுடரினை அரசியல் துறை மகளிர் துணைப்பொறுப்பாளர் தமிழ்விழி ஏற்றினார்.

யாழ்.மாவட்டத்தில் தியாகி திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள நல்லூரில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சூ.சிறில் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது பொதுச்சுடரினை மாவீரர் அருச்சுனாவின் தந்தை சதாசிவம் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியை கடற்புலிகளின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் அருணன் ஏற்றினார்.

ஈகச்சுடரினை யாழ். நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவஞானசேகரம், யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் ஏற்றினர். (2ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ் மக்களுக்குத் தீர்வு கிட்டும் வரை சர்வதேசம் சிறிலங்காவிற்கான உதவியை நிறுத்த வேண்டும்

## யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் எரிக்கிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிட்டும்வரை சிறிலங்காவிற்கான நிதி உதவிகளைச் சர்வதேச சமூகம் நிறுத்திக்கொள்ள வேண்டுமெனக் கோரி யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் குழுவினரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.**

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை சிறிலங்கா அரசு இழுத்தடிப்புச் செய்து வருவதால் தீர்வை நோக்கி செல்ல முடியவில்லை.

இவ்வேளையில் 2005 ஆம் ஆண்டிற்கான சிறிலங்காவின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை தங்கள் அரசு உதவியாக வழங்கவுள்ளதெனச் செய்திகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சூல்ஹெய்ம் குழுவினர் நேற்று கிளிநொச்சி வந்து சேர்ந்தார்

(அலுவலக செய்தியாளர்)

நோர்வே சமாதானப் பிரதிநிதி எரிக்சூல்ஹெய்ம் குழுவினர் தமது யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மாலை முகமாலை சோதனைச்சாவடியூடாக தரைவழியாக 5.00 மணியளவில் கிளிநொச்சி வந்தடைந்துள்ளார். கிளிநொச்சிக்கு வருகை தந்த இக்குழுவினர் இன்று முற்பகல் 11.00 மணியளவில் சமாதானச் செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச சந்தித்து உரையாடவுள்ளார். இச்சந்திப்பின்போது சமாதான நடவடிக்கைகளின் முன்னெடுப்புகள் பற்றியும் பேசுவார்கள் எனத் தெரியவருகின்றது. (சோ,கு)

## மின்சாரம் தடைப்படல்

கிளிநொச்சி ஏ.9 வீதியில் உயரழுத்த மின் மார்க்க அமைப்பு வேலைகள் இன்றும், நாளையும் மேற்கொள்ளப்பட உள்ளமையால் பரவிப்பாஞ்சான் பகுதியில் இந்த இருதினங்களிலும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை (12ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு எதுவுமற்ற வெறும் பேச்சுக்களை தமிழர் ஒருபோதும் விரும்பவில்லை

*– யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்*

(யாழ்ப்பாணம்)

தீர்வுகள் எதுவுமின்றி வெறுமனவே சமாதானப் பேச்சுக்கள் மட்டும் முன்னெடுக்கப்படுவதை தமிழ் மக்கள் ஒரு போதும் விரும்பவில்லை. மாறாகக் கடந்த காலயுத் தத்தினால் தாம் எதிர்கொண்ட இழப்புக்களை ஈடுசெய்யக்கூடிய நிரந்தரத்தீர்வுடன் இணைந்த சமாதானப் பேச்சுக்களையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி விளக்கமளித்துள்ளார்.

சமாதான முன்னெடுப்புக்கள் பற்றிய யாழ்.குடாநாட்டு வாழ் தமிழ் மக்களது எதிர்பார்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்த இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆகியோரை யாழ். அரசியல் துறைச் செயலகத்தில் முற்பகல் 11.30 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இளம்பரிதி இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்த பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் அரசியல் இழுபறிகளால் தாமதமடைந்துகொண்டிருக்க, மறுபுறத்தில் இராணுவ ரீதியிலான பலப்படுத்தல் நடவடிக்கைகளில் அரசாங்கம் (12ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் மனநிலை குறித்து ஆராய்வதே யாழ்.விஜயத்தின் நோக்கமென்கிறார் எரிக்

அரசிற்கும்-புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்கச் செய்யும் நடைமுறையில் இலங்கையின் ஒவ்வொரு பிரஜையும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ்.மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் வைத்து ஊடகவியலாள்களுக்குக் கருத்துத் தெரிவித்த சமாதானத் தூதுவர் எிக்சூல் ஹெய்ம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அரச பிரதிநிதிகள் விடுதலைப்பலிகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசமுன்னர் மக்களது மனநிலை குறித்து ஆராய்வதற்காகவே யாழ்.குடாநாட்டிற்கு வந்ததாகவும், யுத்த காலத்தை விட தற்போது யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ்வில் மாற்றங்கள் உருவாகியதாகவும் தெரிவித்தார். தமது அரசாங்கம் ஏற்பாட்டாளராக செயற்பட்டாலும் இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வர கடுமையாக உழைத்து வருகிறது.

பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முட்டுக்கட்டையாகவுள்ள தவறான புரிந்துணர்வுகளை சிவில் சமூகம் களையமுடியும். எனவே சகல தரப்பினரும் கைகோர்த்து செயற்படுவது அவசியம்.

## வீர வணக்கம்

14-09-2004 அன்று முல்லை மாவட்டம் முத்துஐயன் கட்டுப்பகுதியில் தவறுதலான விபத்தொன்றின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.வீரவேங்கை-அன்புச்சிட்டு (ஆனந்தராசா-அஜிந்தா) சொ.முகவரி - விளிசூட்டி சங்கானை யாழ்ப்பாணம் என்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவில் படுகொலையின் 4 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

(புதுக்குடியிருப்பு)

மந்துவில் படுகொலையின் 4 ஆம் ஆண்டு நினைவுகூரும் நிகழ்வு நேற்று மாலை 5.00 மணிக்கு மந்துவில் பகுதியில் அமைந்துள்ள நினைவுக்கல் வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் வீ.கனகசுந்தரசாமி அவர்கள் தலைமை தாங்கினார்.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரை ஆனந்தபுரம் கிருஷ்ணன் ஆலய பிரதம குரு அவர்கள் ஏற்றிவைக்க, நினைவுக்கல்லுக்கான சுடரை முல்லை மாவட்ட அரசியல் துறை நிதிப் (12ஆம் பக்கம் பார்க்க)

**தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.**

**லெப். கேணல் தியாகி திலீபன்**



## வரி விளம்பரம்

### சிங்கள வகுப்புக்கள்

புதியபிரிவுகள் ஆரம்பம், பிரிவு I,செவ்வாய்,புதன், வியாழன், மாலை.5.30-6.30 வரை, ஆரம்பம்:- 15.09.2004. பிரிவு II- சனி, ஞாயிறு தினங்களில் மாலை 4.00- 6.00 மணிவரை. ஆரம்பம்:- 18.09.2004 பெயர்களைப் பதிவு செய்யவும். பி.எஸ்.ரி. தொழில்நுட்பம் கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (5045)

### தவறிவிட்டது

பாலகிருஷ்ணன் ஆரவள்ளி என்பவருடைய தேசிய அடையாள அட்டை உள்ளடங்கிய சிறிய கறுப்பு நிறப்பேஸ் 15.09.2004 அன்று புதுக் குடியிருப்புப் பொதுச்சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை புதுக்குடியி ருப்பில் ஒப்படைக்கவும். (சி-10402)

### விற்பனைக்குண்டு

3KW ஜெனரேற்றர் டீசல் என்சின் யமகா 50, T.V.S. மோட்டர் சைக்கிள் உடன் விற்பனைக்கு தொடர்பு சுகி கிளினிக், 155ஆம் கட்டை, கிளிநொச்சி. (5044)

# பணம் செலுத்தியோர் நகையைப் பெற்றுக்கொள்க

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு வைத்த அடைகுநகைகளை மீள எடுப்பதற்காக பணம் கட்டியவர்களை நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் கேட்டுள்ளார்.

நகைகளை மீள எடுக்காதுவிட்டால் பின்பு திரும்பவும் அந்த நகைகள் வேறு இடத்திற்கு அனுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(20)



புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் 1989 ஆம் ஆண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இரண்டுமாடி வகுப்பறைக் கட்டடமானது நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக கைவிடப் பட்ட பின்னர் மீண்டும் தற்போது நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன வேலைகள் இடம்பெற்று வருவதையே படத்தில் காண்கின்றீர்கள்.

### தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் போட்டி

(அலுவலகசெய்தியாளர்)

உலக ஆசிரியர் நாள் தமிழ் மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வு -2004

மேற்படி தேர்வு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெற வுள்ளதென தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை செய லர் தெரிவித்துள்ளார்.

இத்தேர்வில் பங்கு பற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தங்கள் வேண்டுகைகளை பள்ளி முதல்வர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக நாளைய தினத்திற்கு முன்ன தாக செயலர், தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை, நடுவப பணியகம், பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி என்னும் முக வரிக்கு அனுப்பி வைக்கும் படி வேண்டப்பட்டுள்ளனர்.

(சோ,கு)

### - திலீபன் மருத்துவ சேவையின் ஆதரவில் -

# சேனையூர், கதிரவெளியில் விசேட சிகிச்சை முகாம்



கிழக்கு மாகாணம்-திருமலை மாவட்ட மூதூர் பிரதேச சேனையூரிலும், மட்டக்களப்பு மாவட்ட கதிரவெளிப் பிரதேசத்திலும் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை ஆதரவுடன் அமெரிக்காவிலிருந்து வருகைதந்த இருதய சிகிச்சை நிபுணர் சண்சுந்தர் அவர்கள் விடுதலைப்புலிகள் மருத்துவப் பிரிவின் ஒழுங்குபடுத்தலுடன் விசேட மருத்துவ சிகிச்சை முகாமை நடத்தினர். இங்கு நவீன இலத்திரனியல் சாதனங்கள் மூலமாகவும், மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனைகள் மூலமும் பலநூற்றுக் கணக்கான மக்கள் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இல.பிரஜைகளாக பதியும் பணி பேசாலையில் நேற்று நடைபெற்றது

தலை மன்னார் பேசாலைப் பகுதியில் நேற்று இது வரை காலமும் தம்மை இலங்கைப் பிரஜைகளாக பதிவு செய்யாதவர்களை பதிவு செய்யும் பணியாக பேசாலை நலன்புரி நிலையத்திலும், தலைமன்னார் பிரதேச சபை அலுவலகத்திலும் யு,என்.எச்.சி.ஆர் நிறுவனமும் மனித உரிமை ஆணைக்குழுவும் இணைந்து நடமாடும் சேவையினை நடத்தின இதற்கு ஏராளமான மக்கள் சமுகம் கொடுத்து சமாதான நீதவான் முன்னிலையில் ஒரு படிவம் மூலம் இலகுவான முறையில் தம்மை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யும் ஆரம்ப வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். இச் சேவை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரை இடம் பெற்றது.

# மன்னார் துயர்துடைப்புச் சங்கத்தால் தையல் பயிற்சி ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட “துயர் துடைப்புச் சங்கம்” மன்னார் வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்தில் வறுமைக்கோட்டில் வசிக்கும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு வீட்டில் இருக்கும் இளம பெண்களின் நலன் கருதி தையல் பயிற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இலவசமாக நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்பில் 20 பயிற்சி யாளர்களும் ஒரு ஆசிரியரும் பணி புரிகின்றார்கள். 15 தையல் இயந்திரங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. பயிற்சிகொடுக்கும் ஆசிரியருக்கு மாதாந்தம் 3500 ரூபா யினை மேற்படி மன்னார் துயர்துடைப்பு சங்கம் வழங்கிவருகின்றது.

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் மன்னார் மாவட்டகிளை நேற்றுத் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய அபிவிருத்தி வங்கியின் மன்னார்க்கிளை நேற்று முற்பகல் 11.00 மணியளவில் மன்னார் அடம்பனில் திறந்து வைக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொதுமேலாளர் செ. தவக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் மங்கல விளக்கினை மாவீரர்களான லெப்.ரோம், கப்டன் செல்வன் ஆகியோரது தந்தையான




செல்வராசா அவர்களும், விவசாய சம்மேளனத் தலைவர் பூராசா மற்றும் கமநல உதவி ஆணையாளர் திருமதி.அ.ஸ்ராலிடிமல் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் அவர்கள் ஏற்றினார். வங்கியின் பெயர்ப்பலகையினை மன்னார் மாவட்ட ஆயர் இராயப்புயோசப் ஆண்டகை அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார். வங்கிக் கட்டடத்தை த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர் சி. கரிகாலன் அவர்கள் திறந்து வைத்தார். கருத்துரைகளை வங்கியின் பணிப்பாளர் க.சுஜன், கமநல உதவிஆணையாளர், உதவி விவசாயப்பணிப்பாளர், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் நிகழ்தினர். சிறப்புரையினை த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் அவர்கள் நிகழ்த்தினார். வங்கியின் முதலாவது வைப்பு வழமை யளருக்கான புத்தகத்தினை த.பொ.மே.நிறுவன மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் முல்லைவீரன் அவர்கள் வழங்கினார். நிகழ்வில் மூன்று இருசக்கர உழவு இயந்திரங்களும், ஐந்து சூரிய மின்கலங் களும் கடனாக வழங்கப்பட்டுள்ளது. பல மக்கள் வங்கியில் பணத்தை வைப் பிலிட்டு வழமையாளர்களாக இணைந்துள்ளனர். (சோ,கு)

### உணர்வெழுச்சி...

இந்நிகழ்வில் நினைவுரை யினை உதவிக்கல்விப் பணிப்பா ளர் புலேந்திராசாவும், யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதியும் ஆற்றினர். ஆயிரக் கணக்கானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பொது அமைப்புக்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப் பலதரப்பட்டோர் இதில் அடங்குவர். மாவட்ட ரீதியாக முல் லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு திருகோணமலையி லும் மிகவும் உணர்வெழுச்சியுடன் தியாகி திலீபனின் பதினேழாம் ஆண்டு தொடக்க நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

இதேவேளை பிரதேச ரீதியாக வும் இந்நிகழ்வுகள் நடைபெற்றுள் ளன. கிளிநொச்சிப் பிரதேசத்தில் கிளி.மாவட்ட வெகுசன அமைப் புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இதன்போது பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகம், திருமதி பொன்தியாகம் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியினை கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றினார்.

கிளிநொச்சி காவல்துறை பணி மனையில் நடைபெற்ற நிகழ்விற்கு பணிமனைப் பொறுப்பாளர் றொய்க் காந் தலைமை தாங்கினார்.

இதேவேளை முல்லைத்தீவில் முல்லை மகாவித்தியாலய மைதா னத்தில் மகாவித்தியாலய உயர் தர வகுப்பு மாணவன் செல்வன் பிரசாந் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை முல்லை மகா வித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெயநாதன் ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியினை முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஏற்றினார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மாவீரர் மண்டபத்தில் கோட்டப் பொறுப்பாளர் பிறையாளன் தலைமை யில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை புதுக்குடியி ருப்பு வணிகர் கழகப்பொறுப்பா ளர் பெ.கந்தசாமி ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியை கிளை நடுவப் பணியகப் பொறுப்பாளர் அம்பி ஏற்றினார்.

துணுக்காய் பாண்டியன் குளப் பிரதேசத்தின் நிகழ்வுகள் மல்லாவி மாவீரர் மண்டபத்தில் யோகபுரம் ம.வி. உயர் தர வகுப்பு மாணவன் அ.சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை மல்லாவி வர்த்தக சங்க செயலாளர் ந.தனுராஜ ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடி யினை துணுக்காய் பிரதேசஅரசியல துறைப்பொறுப்பாளர் செ. புனிதன் ஏற்றிவைத்தார்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் பேருந்து நிலையத்தில் விசேட மாக அமைக்கப்பட்ட மேடையில் தியாகிதிலீபனின் திருவுருவப் படம் தாங்கிய பேழை வைக்கப் பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இது தேசிய எழுச்சிப் பேரவை யின் செயலாளர் தலைமையில் நடை பெற்றது.தமிழீழத் தேசியக் கொடியை மன்னார் மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப் பாளர் கரிகாலன் ஏற்றினார். நினை வுரையை மன்னார் நகர அரசியல் துறைப்பொறுப்பாளர் நிகழ்த்தினார்.

# விவசாய டிப்ளோமாதாரிகள் அரசின் செயல்குறித்துக் கவலை

(தென்மராட்சி)

பட்டதாரிகள் நியமனத்தில் விவசாய டிப்ளோமா பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டதாக யாழ்.விவ சாய டிப்ளோமா பட்டதாரிகள் கவலையடைந்துள்ளனர். அவர்கள் இது குறித்து விவசாயத் திணைக் களம் மற்றும் பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு மகஜர்களையும் அனுப்பிவைத்துள்ளனர்.

இலங்கை வவுனியா, பேரா தனை விவசாயக் கல்லூரிகளில் மூன்று வருடம் டிப்ளோமாக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி களுக்கு தற்பொழுது அரசினால் வழங்கப்பட்ட நியமனம் கவனத் தில் எடுக்கப்படாது ஒதுக்கப்பட் டுள்ளதையடுத்து இப்பட்டதாரிகள் வேதனையும் விரக்தியும் அடைந் துள்ளனர். அதேவேளை மீன்பிடி யியல் டிப்ளோமா, வர்த்தக டிப் ளோமா,நுண்கலை டிப்ளோமா, கணக்கியல் டிப்ளோமா போன்ற கற்கை நெறிகளில் தேர்ச்சி பெற்ற வர்கள் வேலைவாய்ப்புப் பட்டியலில சேர்த்துக்கொள்ளப்பட்ட போதும் ஏன் விவசாய டிப்ளோமாக் கற் கைநெறியை மேற்கொண்டவர்கள் பட்டதாரிகளாக சேர்க்கமுடியாது. எனக் கேள்வி எழுப்பியுள்ளனர். இது குறித்துப் பல முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் இது குறித்து எந்த வித அக்கறை யும் காட்டவில்லை. என்றும் இவர் கள் கவலை தெரிவித்துள்ளனர். யாழ்.குடாநாட்டில் பல்வேறு விவ சாயத் திணைக்களங்களில் பாரிய வெற்றிடங்கள் காணப்படுவதாக வும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

# யசீர் அரபாத்தை சுட்டுக்கொல்வோம்

# இஸ்ரேல் பிரதமர் மீண்டும் மிரட்டல்

(ஜெருசலேம்)

**"பலஸ்தீனத் தலைவர் ஜசீர் அரபாத்தை சுட்டுக்கொல்வோம் அல்லது பலஸ்தீனத்தை விட்டு நாடுகடத்துவோம்" என்று இஸ்ரேல் பிரதமர் ஷரோன் மீண்டும் கூறியிருக்கிறார். குற்றச்சாட்டு பலஸ்தீனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயற்சி நடந்தபோது அதில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.**

இதைத் தொடர்ந்து பலஸ் தீனியர்கள் இஸ்ரேலுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அப்போது நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு பலஸ்தீனத் தலைவர் ஜசீர் அரபாத்தான் காரணம் என்று இஸ்ரேல் குற்றம் சாட்டியது.

75 வயதான அரபாத்தை அவரது தலைமை நிலையத்திலேயே இஸ்ரேல் இராணுவம் முடக்கி விட்டது. அங்கு இருந்து வெளியேற அனுமதிக்கவில்லை. இருந்த போதிலும் பலஸ்தீன தற்கொலைப் படையினர் இஸ்ரேலில் அப்பாவி மக்களை கொன்று குவிப்பது குறையவில்லை. அரபாத் தூண்டுதலாலேயே இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படுவதாக இஸ்ரேல் புகார் செய்தது. இதனால் ஆத்திரம் அடைந்த இஸ்ரேல் தலைவர்கள் அரபாத்தை கொலை செய்வோம் என்று மிரட்டினர். இதற்கு இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்தது. அரபாத்திற்கு எந்த விதமான தீமை இழைக்கப்படவும் அனுமதிக்கமாட்டோம் .

இதனால் இஸ்ரேலின் மிரட்டல் அடங்கியது. எதிர்ப்பைச் சமாளிக்க ஆக்கிரமித்திருக்கும் பலஸ்தீனப் பகுதியிலிருந்து இராணுவத்தை அடுத்த ஆண்டு விலக்கிக் கொள்வது என்று பிரதமர் ஷரோன் தீர்மானித்திருக்கிறார். இதற்கு இஸ்ரேலின் வலது சாரி அணியினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். அவர்களது எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு ஷரோன் பெரும்பாடுபட்டு வருகிறார். அந்த வகையில் தான் அவர் அரபாத்திற்கு மீண்டும் மிரட்டல் விடுத்திருக்கிறார். மீண்டும் மிரட்டல் அரபாத்தை கொலை செய்வோம் அல்லது பலஸ்தீனத்தை விட்டு வெளியேற்றுவோம் என்று கூறியிருக்கிறார்.



பாக்தாத்தில் பொலிஸ் தலைமையகத்திற்கு அண்மையாக சனநெருக்கடி மிக்க சந்தைப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பின் பின் ஈராக்கியர்கள் நோயாளிகளைக் காவிச்செல்லும் படுக்கையைக் காவிச்செல்கின்றனர்.

## வங்கதேசத்தில் கனமழை

## 20 பேர் பலி, 20 இற்கும் மேற்பட்டோர் காயம்

(டாக்கா)

வங்களாதேசத்தில் கடந்த ஐந்து நாட்களாக பெய்த கன மழையால் 20 பேர் உயிரிழந்ததுடன் 20 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். ஏற்பட்ட நிலச்சரிவாலும், மின்சாரம் தாக்கியதாலும் 20 பேர் பலியானார்கள். டாக்காவுக்கு வெளியேயுள்ள புறநகர்ப் பகுதிகளில் பலத்த காற்று வீசியதால் வீட்டுக் கூரை பறந்தது. இதில் 20 பேர் காயமடைந்தனர்.



பங்களாதேஷில் பெய்த பெரும் மழையினால் தலைநகர் டாக்காவில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இவ்வேளையில் டாக்கா வீதியில் மிகுந்த சிரமத்துடன் றிக்சா இழுத்துச்செல்லப்படுகின்றது.

டாக்கா நகரத் தெருக்களில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. இதனால் பள்ளிக்கூடம், கல்லூரி, அரச அலுவலகம், கடை என அனைத்தும் மூடிக்கிடந்தன. சிட்டகாங் நகரில் பிரதமர் கலந்து கொள்ள இருந்த விழா இரத்துச் செய்யப்பட்டது. டாக்கா, சிட்டகாங், சிராஜ்கஞ்ச் ஆகிய நகரங்களில்

விமானப் போக்குவரத்து இரத்துச் செய்யப்பட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 14 அங்குலம் மழை பெய்ததாக வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்தது. கடந்த யூலை, ஆகஸ்ட் மாதங்களில் வெள்ளப்பெருக்கில் 700 பேர் ப்லியானார்கள்.

## சீனா மீதான ஆயுத்தடையை இரத்துச் செய்யாதீர்!

## ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தாய்வான் கோரிக்கை

(தைய்பே)

சீனா மீதான ஆயுதத் தடையை இரத்துச் செய்யக்கூடாதென்று ஐரோப்பிய ஒன்றியத்தை தாய்வான் கேட்டுக்கொண்டுள்ளது. இரத்துச் செய்தால் தாய்வானுக்கு எதிராக ஆயுதபலத்தை சீனா பயன்படுத்த ஊக்கமளித்தது ஆகிவிடும் என்று தாய்வான் கூறியுள்ளது. பிரான்ஸ் ஆயுதத் தடையை இரத்துச் செய்வதில் தீவிரமாக உள்ளது. ஆனால் மற்ற ஐரோப்பிய நாடுகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

டினாமென் சதுக்கத்தில் நடந்த சனநாயக ஆதரவுப் போராட்டத்தை 1989 ஆம் ஆண்டு சீனா கொடூரமாக ஒடுக்கியதைத் தொடர்ந்து இந்தத் தடை பிரகடனப்படுத்தப் பட்டது. தடை இரத்தானால் அது இராணுவப் பலத்தில் தாய்வானை விட உயர்ந்ததாகிவிடும். பிறகு எங்களுக்கு எதிராக ஆயுதப்பலத்தைப் பயன்படுத்தும் என்று தாய்வான் வெளிநாட்டு மந்திரி மார்க் சென் கூறினார்.

# தென்னாபிரிக்காவில் அப்துல்கலாமுக்கு உற்சாக வரவேற்பு உறவுகளை பலப்படுத்துவார்

(டர்பன்)

சனாதிபதி அப்துல்கலாம் வெளிநாடுகளுக்கு ஒரு வார காலம் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். முதலில் தான்சானியா நாட்டுக்கு சென்றார். அங்கு இரு தரப்பு உறவுகள் குறித்து பேசப்பட்டது. பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. தான்சானியா சுற்றுப்பயணத்தை நிறைவுசெய்துவிட்டு நேற்று தென்ஆபிரிக்கா சென்றார் இந்திய சனாதிபதி அப்துல்காலாமுக்கு இவ் விஜயத்தின்போது டர்பன் விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தென்னாபிரிக்க அதிபர் தபோ மெபெகி தலைமையில் அதிகாரிகள் கலாமை வரவேற்றனர். அவர்களது வரவேற்பை அப்துல்கலாம் அன்புடன் ஏற்றுக் கொண்டார்.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது, பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்ப்பது ஈராக்போரின் விளைவுகள், மத்திய கிழக்கு நாடுகளின் நிலவரம் குறித்து இருவரும் விவாதிப்பார்கள். இந்தப் பேச்சுவார்த்தையின் போது தென்மண்டல நாடுகளிடையே ஒத்துழைப்பு, மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவில் நடைபெறும் அமைதி முயற்சிகள் ஆகியவை பற்றி முக்கியமாக விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



தென்னாபிரிக்கா சென்ற அப்துல்கலாமை தான்சானியா நாட்டு பெண்கள் கைகுலுக்கி வழியனுப்பி வைத்த காட்சி.



அபுகிறாய் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கைதி ஒருவர் தனது குடும்பத்தினரை தழுவுகின்றார். இங்கிருந்து 100 இற்கு மேற்பட்ட கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## துருக்கியர்கள் வாழும் நகரத்தில் தாக்குதல் நடத்தாதே!

## அமெரிக்காவிற்கு துருக்கி வேண்டுகோள்

(அங்காரா)

ஈராக்கில் உள்ள "டால் அபர்ச்" நகரில் துருக்கியர்கள் அதிகளவில் வசித்து வருகிறார்கள். அந்த நகரின் மீது தாக்குதல் நடத்துவதை அமெரிக்கா நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று துருக்கி கோரியுள்ளது. "தாக்குதல் தொடருமானால் ஈராக் தொடர்பாக அமெரிக்காவுக்கு அளித்து வரும் ஒத்துழைப்பைக் கைவிடுவோம்" என்று துருக்கி வெளிநாட்டு மந்திரி அப்துலலாகுல் நிருபர்களிடம் கூறினார். அவர் மேலும் கூறுகையில்; "இது தொடர்பாக அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் கொலின்பவல் கூறியுள்ளார்" என்று தெரிவித்தார்.

டால் அபர்ச் நகர் வழியாகத் தான் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் ஊடுருவுகிறார்கள் எனவும் அவர்களை ஒடுக்குவதற்காக அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில் 50 பேர் பலியானார்கள்.



ரோக்கியோவில் வடமேற்குத் திசையில் 87 மைல்களுக்கு அப்பால் உள்ள தூசுமாகோய் மவுன்ற் அசாமாலில் எரிமலைக் குழம்புகள் வெளித்தள்ளி இரண்டாம் நாளின் பின் புகைமண்டலம் வெளியேறுகின்றது.




லாஸ்வெகாஸ்சில் தேசியப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் அமெரிக்கத் தேசிய இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் ரொபேட் ரெயிலர் (வலது) அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ்சுடன் சம்ப[illegible]க்கின்றார்.

# தியாகதீபம் திலீபனின் நினைவு நாட்களை எழுச்சியுடன் அனுஷ்டிக்க மன்னாரில் ஏற்பாடு

(மன்னார்)

**தியாகதீபம் லெப்.கேணல் திலீபன் நினைவு நாட்களை மன்னார் மாவட்டத்தில் சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான நடவடிக்கைகளை தேசிய எழுச்சிப்பேரவை மேற்கொண்டுள்ளது.**

மன்னார் நகரத்திலும் மற்றும் மன்னாரிலுள்ள கிராமங்கள் அனைத்திலும் சிரமதானப் பணிகள், இரத்ததானம், நினைவுரைகள், அடையாள உண்ணா விரதங்கள் என்பவற்றுக்கு பரவலாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் மற்றும் மன்னார் நகரப் பொறுப்பாளர் முருகேசன் ஆகியோரின் வழிநடத்தலில் மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை திலீபன் நினைவு நாட்களை எழுச்சி யுடன் அனுஷடிக்க ஒழுங்குகளைச் செய்துள்ளது. (மி)



தருமபுரம் மேற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரண மாக அங்குள்ள குளமொன்றை மக்கள் உணவுடனான வேலைத் திட்டத்தின் மூலம் மனிதவலுவைப் பயன்படுத்தி ஆழப்படுத்துகின்றனர்.(சசி)

# தமிழீழ விளையாட்டுத் துறையினரின் முல்லை மாவட்ட செயலகம் திறப்பு

(முல்லை)

முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைச் செயலகம் நேற்றுமுன்தினம் மணற்குடியிருப்பு, முல்லைத்தீவில் காலை 10.30 மணிக்கு திறந்துவைக் கப்பட்டது.

முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கமல் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லைத்தீவு விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் குமார், விளையாட்டுப் பயிற்றுனர் வின்சன் ஆகியோர் ஏற்றினார்கள்.

தமிழீழத் தேசியக்கொடியினைக் கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ம.ரங்கன் ஏற்றினார்.

பெயர்ப்பலகையினை முல்லைப்பிரதேசக் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் திரைநீக்கம் செய்தார்.

கட்டடத்தினை தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். (20)

# புதிய வாக்காளர் பதிவு 17 ஆம் திகதி வரை நீடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

புதிய வாக்காளர் பதிவுகள் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம சேவை அலுவலர்கள் பிரிவாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புதிய வாக்காளர்களைப் பதிய வேண்டிய திகதி மீண்டும் 17 ஆம திகதி வரை நீடிக்கப் பெற்றுள்ளதெனவும். எனவே வாக்குரிமைக்கு தகுதியானவர்கள் அனைவரையும் தமது பகுதி கிராம சேவை அலுவலர்கள் மூலம் தவறாது பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் கிளி.மாவட்டமேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டியுள்ளார். (சோ,கு)

# தாயகம் திரும்பிய எட்டுப்பேர் சொந்த இடங்களுக்குச் சென்றனர்

(மல்லாவி)

இந்தியா திருநெல்வேலி மாவட்டம் தாளையூற்று அகதிமுகாம், திருவள்ளுவர் மாவட்டம் கும்மிடிபூண்டி அகதிமுகாம், இராமேஸ்வர மண்டபமுகாம் ஆகிய பகுதிகளிலிருந்து 8பேர் தலைமன்னார் ஊடாகத் தாயகம் திரும்பியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை இராமேஸ்வரத்திலிருந்து சிறிய படகு மூலம் தலைமன்னார் வந்த இவர்களைத் தலைமன்னார் கடற்படையினர் கைதுசெய்து தலைமன்னார்ப் பொலிசாரிடம் கையளித்தனர். இவர்கள் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு மன்னார் நீதிமன்றத்தில் முன் நிறுத்தப்பட்டவேளை மன்னார் மாவட்ட நீதிபதி என்.எம்.அப்துல்லா அவாகளது சொந்த இடங்களுக்கு மன்னார் சாவற்கட்டு கிராம அலுவலகருடாக அனுப்பிவைக்க உத்தரவிட்டார். (மி)

# தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையில் கிளியில் ஆங்கில மொழிக் கல்லூரி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக கொழும்புக் கிளைப் பணிப்பாளர் சந்துரு பரராஜசிங்கம் தலைமையில் ஆங்கில மொழிக்கல்லூரி கடந்த திங்களன்று திறந்து வைக்கப்பெற்றது.

மங்கல விளக்கினை பரமநாதன் (பொறியிலாளர் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், லண்டன்) பேராசியர் ராமசாமி (தமிழர் புனர் வாழ்வுக் கழகம் இங்கிலாந்து) ஆகியோர் ஏற்றி வைத்தனர். பொதுச்சுடரினை வாகீஸ்வரன் (தமிழர் புனர்வாழ்வுக் கழகம். அவுஸ் திரேலியா) ஏற்றி வைத்தார்.

தேசியக் கொடியினை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைக்க, பெயர்ப் பலகை யினை கோபாலசிங்கம் (வன்னி தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்) திரைநீக்கம் செய்துவைத்தார். கல்லூ ரியின் பொது மண்டபத்தினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி திறந்து வைத்தார். பாடசாலையின் காரியாலயத்தினை அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர்சோ.தங்கன் திறந்து வைத்தார். திருமதி.மாக்கிரட் பரராஜசிங்கம் (இக்கல்லூரியின் அதிபர்), செல்வி யூலியா (கல்லூரி ஆசிரியர்), சோ.தங்கன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.




இது வரை காலமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பெற்று வந்த (03 பிரிவாக) ஆங்கில வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ்களை கே.பி.றெஜி, சோ.தங்கன், UNHCR பிரதிநிதி ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனா.

அதனைத் தொடர்ந்து இம் மூன்று வகுப்புகளிலும் விசேட சித்திபெற்ற மாணவ. மாணவிகளாகிய செல்வன். கஜன், செல்வி யமுனா, செல்வன் பிரதீபன் ஆகியோருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கடிகாரம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது. (கு.ச)

# நிறுத்தலளவைக் கருவிகளுக்கு முத்திரையிட அறிவுறுத்து

கிளிநொச்சிப் பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடு நேற்று முதல் கிளிநொச்சி நிறுத்தலளவைக் கருவிகள் விற்பனை நிலையத்தில் இடம்பெற்று வருகின்றது. (இலங்கைவங்கி முன்பாக) நிறுத்தலளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளிற்குள் அவற்றை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு வருவாய்ப்பகுதி நிறுத்தலளவைப் பிரிவு வேண்டிக்கொண்டுள்ளது.

# கமநல அபிவிருத்தித் திணைக்களங்களுக்கு விவசாய உபகரணங்கள் கையளிப்பு



(முள்ளியவளை)

நிகொட் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களங்களுக்கு விவசாய இயந்திரங்கள் கையளிப்பு, முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தர்மலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் மு.பகல் 11.00 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேற்படி இந்நிகழ்வின் பொதுச் சுடரினை 2ஆம் லெப்ரினன்ட் மாலினியின் தந்தையார் க. சிவானந்தசிவம் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார். கமநல அபிவிருத் தித் திணைக்கள உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு உத்தியோகத்தர் மாதவராசா வரவேற்புரையை நிகழ்த்தினார். தொடர்ந்து தலைமையுரை இடம் பெற்றது. கருத்துரையை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன், மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி, நிகொட் பணிப்பாளர் ரகுநாதபிள்ளை ஆகியோர் நிகழ்த்தியதை அடுத்து மாவட்டத் திற்குட்பட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களங்களிற்கு 2 சில்லு உழவு இயந்திரம் இரண்டும், நீர் இறைக்கும் இயந்திரம் பத்தும், தெளி கருவி இரண்டும், சாதாரண தெளி கருவி ஐந்தும் பகுதி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் நிகொட் பணிப்பாளர் உட்பட கலந்து கொண்ட பிரமுகர்களால் வழங்கப்பட்டன.

முள்ளியவளை கமநல அபிவிருத்தித் திணைக்கழக பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி. அ.இராசலட்சுமியின் நன்றியுரையுடன் மதிய போசனம் வழங்கப்பட்டு இந நிகழ்வு நிறைவானது. (ஆ.20)

# இரவு நேரக்கொள்ளை பூந்தோட்டத்தில் அதிகரிப்பு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் இரவு நேரத்தில் அதிகளவான கொள்ளை சம்பவங்கள் இடம் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பகல் நேரத்தில் பிச்சை எடுப்பவர்கள் போன்றுவரும் சில வெளியிடத்தைச் சேர்ந்த நபர்கள் நோட்டம் பார்த்துவிட்டுப் பின்னர் இரவு நேரத்தில் வந்து அந்த வீட்டில் உள்ள பொருட்களைச் சூறையாடிச் செல்வதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் அண்மை நாட்களாக அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. களவுக்கு வரும் நபர்கள் வீட்டில் உள்ள உடுதுணிகள், ஆடு, கோழி என்பனவற்றையும் கையில் அகப்படும் பொருட்களையும் எடுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# வவுனியாவில் மிளகாய்த் தூளைத் தூவி முச்சக்கர வண்டியைக் கடத்த முயற்சி

(செட்டிகுளம்)

வவுனியாவில் மிளகாய்த் தூள் தூவி முச்சக்கரவண்டி ஒன்று கடத்தப்பட முயற்சி மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. திங்கள் மாலை ஏழு மணியளவில் வவுனியா நகரப் பகுதியில் இருந்து முச்சக்கரவண்டி ஒன்றினை வவுனியா பூந்தோட்ட பகுதிக்குப் போகவேண்டும் என்று தெரிவித்து ஒரு நபர் வாடகைக்கு அமர்த்திச் சென்றுள்ளார். இதன் பின்னர் மகாறம்பைக் குளம்பகுதிக்கு முச்சக்கரவண்டி சென்ற போது பின்னால் அமர்ந்து இருந்த நபர் முச்சக்கரவண்டியின் சாரதி மீது மிளகாய்த் தூளைக் கொட்டினார். சாரதிக்கும் அந்த நபருக்கும் இடையில் நீண்டநேரம் மோதல் இடம் பெற்றது. இதன் பின்னா சாரதியிடம் இருந்த 700 ரூபா பணத்தை பறித்துக் கொண்டு குறித்தநபர் தப்பித்துச் சென்றுள்ளார். இதன் பின்னர் முச்சக்கர வண்டிச்சாரதி வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். பொலிசாரிடமும் இது சம்பந்தமாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர் காமினி சரத் (வயது 30) என்பவராவர். (21)

## கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் திறப்பு

(அவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் மேற்கு அபிவிருத்திச் சங்க கட்டடத் திறப்பு விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறள்ளது. கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கி.அ.சங்க மண்டபத்தினை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். கரைச்சி பிரதேசச் செயலர் செல்வி க.சுலோசினி, கி.அ.சங்க உத்தியோகஸ்தர் முதலானோர் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (சோ.கு)

# "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"

சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த தியாக வேங்கை திலீபன் உண்ணாவிரதத்தின் இரண்டாம் நாள் தன் முன்னால் குழுமியிருந்த மக்கள் மத்தியில் ஆற்றிய உரை.




அன்பிற்கும் மதிப்பிற்குரிய தமிழீழ மக்களே!

அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்! நிற்க வலுவில்லை இருந்து கொண்டே பேசுகிறேன். நாளை நான் சுயநினைவோடு இருப்பேனோ தெரியாது. அதனால் தான் இன்று உங்களுடன் பேசவேண்டும் என்று விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம் ஏற்கனவே 650 பேர் இலட்சியத்துக்காக மரணித்து விட்டனர்.

மில்லர் கடைசியாகப் போகும் போது என்னிடம் ஒரு வரியைக் கூறினான் " நான் எனது தாய் நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப் போவதை இட்டு பெருமிகழ்ச்சியடைகிறேன். ஆனால் ஒரே ஒரு ஏக்கம் எனது மக்கள் விடுதலை அடையும் காட்சியை என்னாற் காணமுடியாமற் போகிறதே என்பதே அந்த ஏக்கமாகும்" எனக் கூறி விட்டு வெடிமருந்துகளை உடைய வாகனத்தில் ஏறிச் சென்றான்.

எனக்கு முன்சென்ற 650 பேரும் எனக்குத் தெரியவே இறந்தனர். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். நான் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக தலைவரிடம் அனுமதி கோரிய போது "திலீபன் நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன்" எனக் கூறி எனக்கு உற்சாகம் ஊட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர் தான் உங்களுக்கு கிடைத்துள்ளார். நான் தலைவரிலும் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன் இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய்மார்களே! பெரும் வீரரின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும் நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம். அதை வானிலிருந்து எனது 650 தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மனநீதியாக தற்போது நான் உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

எமது மக்களின் விடிவிற்காக நான் பூரண மனத் திருப்தியுடன் இவ் உண்ணாவிரதத்தில் இறங்கினேன். விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில் தமது உயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கிறார்கள். தெளிவான உறுதியான இலட்சியத்துடன் இருக்கிறார்கள். எமது இறுதி இலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடைய வேண்டும் என்பதே எனது இறுதி ஆசை. வணக்கம்.

## அண்ணன் திலீபன் அவர்களுக்கு

படிக்க நினைக்கிறேன் முடியவில்லை.
எழுத நினைக்கிறேன் முடியவில்லை.
முள்ளால்நெருடுவது போல் உனது நினைவு.
அதைஅழிக்க நினைக்கிறேன் அதுவும் முடியவில்லை.
தொடர்ந்து முன்னேறவும் முடியவில்லை.
சோம்பிக்கிடக்கவும் முடியவில்லை.
முடியவில்லை என்ற சொல்லை
தமிழ் அகராதியில் இருந்து அகற்ற வேண்டும்-
என்று நினைத்தவன் நீ.
சோம்பல் என்பது தீண்டப்படாத சொல்.
தீ இடவேண்டும் என்பவன் நீ.
பக்குவமாய்ப்பேசிப் பலரை
உற்சாகம் ஊட்டியவன் நீ.
விடுதலைக்கு வீரியம் சேர்த்தவன் நீ.
வேங்கைகளுக்கு பாசறை அமைத்து-
பயிற்சி கொடுத்தவன் நீ.
அரசியல் ஞானமூட்டி அணிதிரட்டியவன் நீ
ஆணுடன் பெண் சமமென்று அலட்டாமல்-
அதையும் நடைமுறையில் காட்டிய நாயகன் நீ.
களங்களில் வேங்கை நீ.
தமிழின விடுதலையொன்றே தலையாயக் கடமையென்று-
தண்ணீரும் அருந்தாமல் தன்னையே ஈர்ந்த-
தலைவன் நீ.
தமிழன் தமிழ் படிக்கத் தடைபோட்ட காலத்தில்-
மருத்துவப்படிப்பை மனதிற் கொள்ளாமல்-
தமிழ் அன்னைக்கே உயிர்கொடுத்த உத்தமன் நீ.
எடுத்த சபதம் முடிக்க நான்காவது வல்லரசை-
நடுங்க வைத்தவன் நீ.
நல்ல வேடமிட்டு நம்மவர் மத்தியில் உலாவுவது-
நச்சுப்பாம்பென நாடறியச் செய்த ஒற்றன் நீ.
நாளை மலரும் தமிழீழத்தை வானத்தில் இருந்து-
பார்ப்பேன் என்று வாக்குறுதி கொடுத்த வள்ளல் நீ.
நீ வளர்த்த சுதந்திரப் பறவைகள் இன்று எதிரியை-
சுதந்திரமாகத்திரிய விடுவதில்லை.
நீ வளர்த்த அகிம்சைத் தீ இன்னும் அணையவில்லை.
நீ தயார்படுத்திய அணிகளும் அமைதி கொள்ளவில்லை.
அனைத்தும் அப்படியே நடக்கிறது.
ஓயாது விடுதலைக்கு உழைத்தவன் நீ.
உயிரற்ற உடலும் கூட உழைக்க வேண்டுமென்று-
உறுதிகொண்டவன் நீ.
நா வரண்டு போகயிலும் நல்ல தமிழில் நம்-
தலைவன் வழி நில்லுங்கள்.
தமிழீழம் வெல்லுமென்று தளராமல் சொன்ன தனையன் நீ.
முன்னோக்கி நகர்கிறோம் வெற்றிப்படிகளில்.
நீ சொன்னதைச் செய்கிறோம் தலைவன்-
நிழலில் நின்றபடி.
தமிழீழம் வென்று உன் கனவை நனவாக்கி-
காணிக்கை செலுத்துவோம் இது உறுதி.

**க.மணி** (சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி)

## பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய வடமராட்சி கோட்ட மகளிர் அமைப்புக்கள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கோட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கமநிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி முற்பகல் 10.00மணியளவில் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இதில் வடமராட்சியில் உள்ள மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி சமகாலத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள், தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு சமகால விடயங்கள் குறித்து ஆராயவுள்ளனர். (33)

## -கடல்வாழ் உயிரின வள-
## தொழில் நுட்பப் பாட ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு தொகை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் கடல் வாழ் உயிரின வள தொழில் நுட்பப்பாட ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணியளவில் யாழ். வலயக்கல்விப் பணிமனை வளாகக் கட்டடத்தில் இடம் பெறவுள்ளது. கடற்றொழிலாளர்கள் செறிந்து வாழும் யாழ் குடா நாட்டில் கடல வாழ் உயிரின வள தொழில் நுட்ப அறிவினை பாடசாலை மாணவர்களிடையே மேம்படுத்துவதற்கான உந்து சக்தியை வழங்கும் நோக்குடனேயே இவ் உதவுதொகை வழங்கப்படவுள்ளது. (33)

## யாழ்.பிரதேச செயலகத்தில் நாளை நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலர்பிரிவு வாழ் மக்களுக்கான விசேட நடமாடும் சேவை எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தேசிய அடையாள அட்டை பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை நீக்குவதற்காகவே இவ்நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மேற்படி பிரதேச செயலர் பிரிவில் வாழும் மக்கள் தமக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என அறிவிககப்பட்டுள்ளது. (33)

## கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நோர்வே அரசு உதவ முன் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் பிரதேச பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு நோர்வே அரசு முன்வந்துள்ளது.

கடந்த கால போர் அனர்த்தங்கள் மற்றும் இடப் பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டே நோர்வே அரசாங்கம் இவ்வாறான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் கற்றலை இடை நிறுத்திய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதுடன் அவர்கள் தொடர்ந்தும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உரிய உதவிகளை வழங்கவும் நோர்வே அரசு முன் வந்துள்ளது.

அத்துடன் பாடசாலை கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழில் நுட்பப் பயிற்சிகளையும் வழங்க அது முன் வந்துள்ளது. (33)

## சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு யாழ்.அரச அதிபர் திடீர் விஜயம்
### -கடமை தவறிய பலர் சிக்கினர்

(தென்மராட்சி)

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள், பிரதேச செயலாளர் போன்றோர் அலுவலக நேரம்தவறிக் கடமைக்கு வருவதாக இப்பிரதேச மக்கள் யாழ்.அரசாங்க அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் ஆகியோர் கவனத்திற்குக் கொண்டு சென்றதையடுத்து இவற்றை நேரில் கண்டறியத் திடீர் விஜய மொன்றை அண்மையில் யாழ்அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

காலை 8.30மணிக்கு மேற்கொண்ட இத்திடீர் விஜயத்தால் நேரம் தவறிக் கடமைக்கு வந்த பிரதேச செயலாளர், ஊழியர்கள் உட்பட பலர் கையும் மெய்யுமாக மாட்டிக்கொண்டதாகத் தெரியவருகிறது. ஒன்பதே கால் மணி வரை அலுவலகத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட அரசாங்க அதிபர் அலுவலக நேரத்தில் பணிக்குவராத பல ஊழியர்களுக்கு வருகைப்பதிவேட்டில் சிவப்பு மையினால் கையெழுத்திட்டுச் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

அரசாங்க அதிபர் அலுவலகத்தைவிட்டு சென்ற பின்பே, பத்து மணியளவில் பிரதேச செயலாளர் பணிக்கு வந்துள்ளதாகத் தெரியவருகிறது. இச்சம்பம் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. யாழ்.அரசாங்க அதிபரின் இச்செயல் தென்மராட்சிப் பகுதி மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (28)

## இடைநிறுத்திய பேருந்து சேவை மீண்டும் தொடர வேண்டுகை

(தென்மராட்சி)

சங்கானையில் இருந்து சுன்னாகம் ஊடாச் சாவகச்சேரி வரையிலான போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த பேருந்து சேவையை, (இல775) உடனடியாக ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

மட்டுவில் பகுதி விவசாய மக்கள் தமது உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் இப்பகுதி மாணவர்கள் தமது கல்வி மேம்பாட்டினை மேற்கொள்வதற்கும் இப் பேருந்து சேவை வசதியாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

எனவே இடைநிறுத்தப்பட்ட பேருந்து சேவையை மீண்டும் விரைவில் தொடங்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (28)

செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகும் பொழுது இந்தியாவில் இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் இலங்கைக்கு வந்தவுடன் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி பத்திரிகையாளர் மகாநாட்டை கூட்டி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கப் போவதாக தெரிவித்தார். கோழி முட்டை இட்ட உடன் கொக்கரிப்பது வழக்கம். இது புதுமையான தொன்றல்ல. சேவல் சின்னம் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில் இணைந்தது வியப் பொன்றும் இல்லை. இதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கு சனாதிபதி பெரும்பான்மை அற்ற நிலையில் அரசாங்கத்தை அமைத்தார். ஆகவே அவர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு சிறுபான்மைக் கட்சியின் ஆதரவு இவருக்குத் தேவைப்பட்டது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,ஜாதிக ஹெல உறுமய போன்ற சிறிய கட்சிகளின் ஆதரவு சனாதிபதிக்குத் தேவைப்பட்டது. ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற இரு உறுப்பினர்களின் ஆதரவை இரகசியமாக அரசு பெற்றுக் கொண்டதால் ஹெல உறுமய ஆதரவு வழங்காதெனக் கூறிவிட்டனர். முஸ்லிம் காங்கிரஸ் தற்கு பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தியது. அப்பொழுது ஆறுமுகம் தொண்டமான் அரசாங்கத்திற்கு பல நிபந்தனை விதித்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியை மாற்றலாகாது, மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டம் இடைநிறுத்தப்பட வேண்டும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு மூன்று கெபினட் அமைச்சுப் பதவிகளும், இரண்டு பிரதி அமைச்சுப் பதவிகளும், வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விட்டிருந்தார். அதனால் பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டது. ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி யின் பிரச்சாரச் முறை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக இருக்கின்றபடியால், சனாதிபதி முறையை மாற்றலாகாது எனத் தொண்டமான் கூறியுள்ளார். தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை மாற்றியமைக்க வேண்டுமென அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விகிதாசாரத் தேர்தல் முறைகளினால் சிறுபான்மைக் கட்சியினருக்கு அதிக ஆசனங்கள் கிடைக்கும் என்பது அவரின் கூற்றாகும். அதை மனதில் கொண்டு விகிதாசார தேர்தல் முறையையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையையும் மாற்றலாகாது என அப்பொழுது கோரிக்கை விட்டிருந் ஆதரவை மீளப்பெற்றால் அரசாங்கம் கவிழும். ஆனால் இது தற்போதைக்கு நடைபெறாது. தற்பொழுது அரசாங்கத்திற்கு 114 ஆசனங்கள் பாராளுமன்றத்தில் இருக்கின்றபடியால், ஹெல உறுமயவையோ அல்லது முஸ்லிம் காங்கிரசையோ இணைப்பதற்கு அவசியம் ஏற்படாது. ஆகவே எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கத்திற்கு எந்த எதிர்ப்புகளும் வராது. அப்படி வந்தாலும் அதை அரசாங்கம் சமாளித்துக் கொள்ளும். வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பு இல்லாமல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி

# அரசின் ஏமாற்று வித்தைகள் இனியும் எடுபடாது

ஒன்றும் கிடையாது. ஆனால் அரசாங்கத்தின் தற்போதைய நிலையில் தொண்டமான் இணைந்துள்ளமையால் மிகவும் பலவீன முற்றிருந்த அரசு இப்பொழுது பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற நிலைக்கு வந்துள்ளது. இது அரசுக்கு ஒரு வெற்றியாகும்.

ஐக்கிய சுதந்திர முன்னணி அரசுக்கு பாராளுமன்றத்தில் 106 ஆசனங்கள் மாத்திரமே இருந்தன. 225 ஆசனங்களைக் கொண்டுள்ள பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமானால் 113 ஆசனங்கள் தேவைப்பட்டன. கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி 82 ஆசனங் களைக் கைப்பற்றியது.ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டி இட்ட முஸ்லிம் காங்கிரசுக்கு 5 ஆசனங்களும், மலையக மக்கள் முன்னணிக்கு 1 ஆசனமும், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு 22 ஆசனமும், இ.தொ.கா 8 ஆசனங்களும் கிடைத்தன. ஆனால் இக் கட்சி ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளித்தாலும், அரசை அமைப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை. ஆகவே ஐக்கிய தேசிய முன்னணி அரசொன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவில்லை. ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்த


சந்திரிகா


ஆறுமுகம் தொண்டமான்


விமல்வீரவன்ச

ஐக்கிய தேசியக் கட்சி சின்னத்தில் போட்டியிட்டு ஐந்து ஆசனங்களைக் கைப்பற்றியது. அக்கட்சி ஆரம்பத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முன்வந்தது. ஆனால் அக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரை அரசாங்கம் தனது கட்சியில் சேர்த்துக் கொண்டபடியால் முஸ்லிம் காங்கிரஸ் அரசிற்கு ஆதரவு வழங்குவதை நிறுத்திக் கொண்டது. இதனால் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து அதிக தூரம் விலகிச் சென்றது. அதே போல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் படி கட்சியில் இருந்து விலகி அரசுக்கு ஆதரவு வழங்குவதில் எந்தத் தடையும் கிடையாது.

பின் அரசாங்கம் தொண்டமானை இணைத்துக் கொள்வ

செயலாளர் விமல் வீரவன்ச தொண்டமானை இணைத்துக் கொள்வதில் எந்தப் பிரச்சினையும் கட்சியில் கிளம்பாதென உறுதியாகக் கூறிவிட்டார். அதன் பின் ஆறுமுகம் தொண்டமான் பல பேச்சுவார்த்தைகளை சனாதிபதியுடன் நடத்தினார். இறுதியில் தொண்டமான் எந்த நிபந்தனைகளையும் விதிக்காமல் தேசிய நலன் கருதி அரசாங்கத்தில் இணைந்துகொண்டார்.

**எம்.எஸ்.எம்,ஆயுப்**
**(லக்பிம)**
**மொழியாக்கம்.**
**அ. சக்திவேல்**

சனாதிபதி அவர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றி நாட்டில் பிரதமராகுவதை தற்பொழுது இலக்காகக் கொண்டுள்ளார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி

தார். ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் நடந்த சில ஊழல்கள், முறைகேடுகளை அரசாங்கம் தற்பொழுது விசாரணை செய்து வருகின்றபடியால் இவைகளில் இருந்து ஐக்கிய தேசிய முன்னணியைக் காப்பாற்றுவதற்கே தொண்டமான் அரசாங்கத்தில் இணைந்துள்ளார் எனப் பலர் அபிப்பிராயங்களைக் கூறுகின்றனர். இலங்கை அரசியல் வரலாற்றில் இவைகள் யாவும் நடந்து முடிந்தவைகளாகக் கணிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஊழல்களை ஒழிப்போம் என்று முழங்கிய ஜே.வி.பி. தற்பொழுது ஏன் மௌனம் சாதிக்கின்றது என்பது பெரும் புதிராகவுள்ளது. ஆறுமுகம் தொண்டமான் அரசாங்கத்திற்கு நிபந்தனை வழங்காமல் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டாலும் அக்கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் இன்னும் எதிர்க் கட்சியில் அங்கம்வகிக்கின்றனர். ஆகவே ஆறுமுகம் தொண்டமான் எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டு சிலவேளை அரசுக்கு வழங்கும்

னாலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கத்திற்கு தப்பிக் கொள்வதற்கு வழி கிடையாது. கடந்த அரசாங்கம் இடைநிறுத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்திய இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என ஆறுமுகம் தொண்டமான் கூறியுள்ளார். ஆனால் ஜே.வி.பியினர் இதற்கு எதிர்மாறாகச் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் விடுதலைப் புலிகள் சமஷ்டி அதிகாரப் பரவலாக்கலை அமுற்படுத்துவதில் குறிக்கோளாக இருக்கின்றனர். ஆகவே அரசாங்கம் இரு தலைக் கொள்ளியெறும்பின் நிலைக்கு தற்பொழுது தள்ளப்பட்டுள்ளது. மேற்கூறிய விடயங்களை அரசாங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் இணைந்து செயற்படுத்தினால் 39 ஆசனங்களை வைத்துள்ள ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு இடமுண்டு.

மற்ற விடயம் ஜே.வி.பியின் கொள்கைகளை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள எனவே தனது கொள்கைகளை ஜே.வி.பியினருக்கு அமுற் படுத்த முடியால் போகும். தற்பொழுது சர்வதேச ரீதியில் புலிகளைச் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்கள். அதனால் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் வெகுவிரைவில் ஆரம்பிக்க வேண்டும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக் கின்ற படியால் அரசாங்கம் பூச் சாண்டி காட்ட முடியாது.

# அம்பாறையில் சிறிலங்காப் பொலிசாரால் சட்ட விரோத ஆயுதங்கள் பல மீட்பு

## முஸ்லிம் இளைஞர்ஒருவர் கைது

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களில் நேற்று முன்தினமிரவு சிறிலங்காப் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையொன்றின் போது சட்ட விரோத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இப் பிரதேசங்களில் இடம் பெற்றுவரும் சமூக விரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்த் தேடுதலின் போது சில வீடுகளிலிருந்து இவை கைப்பற்றப்பட்டன. கல்முனைப் பொலிஸ் தரப்புத் தகவலின் படி சம்மாந்துறையில் ரி-56 ரகதுப்பாக்கியொன்று அதற்கான ரவைகளுடனும் உள்ளூரில் தயாரிககப்பட்ட 5 கைத்துப்பாக்கிகளும கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடாபாக முஸ்லிம் இளைஞரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் சிலர் சந்தேகத்தின் பிரகாரம் தேடப்பட்டு வருகின்றார்கள்.

## ( )ிசாரணை நடத்தச்சென்ற ( )பாலிசார் மீது தாக்குதல்

சிறிலங்காவில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தாக்கப்பட்டு அவரது சீருடையும் கிழித்தெறியப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. உரகஹ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் சென்ற சனியிரவு விசாரணைக்காக நபரொருவரைக் கூட்டிவரச் சென்ற போது மது போதையில் நின்ற அந்த நபர் இக் கான்ஸ்டபிளின் முகத்தில் பலமாகத் தாக்கியதுடன் அவரது சீருடையையும் கிழித்தெறிந்துள்ளார். காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஆபத்தான நிலையில் கரபிற்றிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கொழும்பு மொத்த விற்பனைச் சந்தையில்

## அரிசியின் விலை உயர்வு

கொழும்பு மொத்த விற்பனைச சந்தையில் அரிசியின் விலை உயர்ந்துள்ளது. அரிசியின் விலை நேற்று முன்தினம் முதல் 5 ரூபாவால் உயர்ந்துள்ளது. இதன்படி உயர்ரக சம்பாவின் விலை 49 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடு ரக அரிசி 45 ரூபாவா[illegible] அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டில் அரிசி நிரம்பலில் காணப்படும் குறைவே இதற்கான காரணம எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கோதுமை மா மற்றும் அரிசி ஆகியவற்றின் இறக்குமதியை கூட்டுறவுமையங்களின் ஊடாகவும் மேற் கொள்ள அரசாங்கம் தீர்மானித் துள்ளது. இதன் அடிப்படையில் முதலில் கொழும்பிலும் பின்னர் ஏனைய பகுதிகளிலும் இந்த இறக்குமதிகள் இடம் பெறவுள்ளதாக பிரதமமந்திரி தெரிவித்துள்ளார்.இதன் மூலம் உயர்ந் துள்ள அரிசி மற்றும் கோதுமைமாவின் விலையைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.(32)

# ஜே.வி.பி.யினர் விரட்டியடிப்பு

(கொழும்பு)

ஊவா பரணகம பிரதேச சபையில் தொங்க விடப்பட்டிருந்த சனாதிபதி சந்திரிகாவின் படத்திற்கு மேல் ஜே.வி.பியினர் விளம்பரம் ஒட்டியதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்கள். ஒன்று கூடி ஜே.வி.பி யினரைக் கடுமையாக தாக்கி விரட்டி அடித்துள்ளனர்.

# நகரச் சூழல் முகாமைத்துவம் ஒரு பார்வை

நகரச் சூழல் முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சி ஒன்று அண்மையில் இந்தியாவின் மும்பாய் நகரில் நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் இந்தியாவின் 25 மாவட்ட நகராட்சி மன்ற உதவி ஆணையாளர்களும், சுகாதார அதிகாரிகளும் இலங்கையில் இருந்து யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, காத்தான்குடி, நீர்கொழும்பு, காலி ஆகிய மாவட்டங்களின் உதவி ஆணையாளர்களும் கலந்து கொண்டனர்

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்நித்தியானந்தமும் கலந்து கொண்டார். அவரிடம் நகரச் சூழல் முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சியின் பலாபலன் பற்றி வினவிய போது அவர் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு,

இப்பயிற்சியானது மும்பாயில் ஐந்து நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து நான் சென்றிருந்தேன். உண்மையில் இப்பயிற்சி மிகவும் பிரயோசனமானதும் முக்கியமானதும் ஆகும். எமது பிரதேசங்களிலும் அவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய வழிவகைகளையும் இப்பயிற்சி மூலம் கற்றுக் கொண்டுள்ளோம்.

மேலும் இப்பயிற்சியில் நகரச் சூழல் பாதுகாப்புச் சம்பந்தமான 18 தலையங்கங்களிலான விரிவுரைகளும். வெளிக்களப் பிரயாணங்களும் மேற்கொள்ளப்பட்டன. முக்கியமாக நகர திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம் சம்பந்தமான கருத்துரைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பெற்றது.


பொன் நித்தியானந்தம்

அத்தோடு வெளிக்களப் பிரயாணங்கள் மூலம் நாசிக் நகரசபைக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்படும் திண்மக் கழிவினை கூட்டெருவாக்கும் தொழிற்சாலைக்கு பாபா அணு ஆராய்ச்சி நிலையத்திலுள்ள உயிரியல் வாயு உருவாக்கும் செயற்பாட்டினையும் பார்வையிட்டோம். உலகில் சனத்தொகை அதிகரிப்பு காரணமாக நகரங்களிலும் பட்டினங்களிலும் கழிவுப் பொருட்களின் அளவும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இக்கழிவுப் பொருட்கள் பெறுமதியானவை. இவற்றினை உற்பத்திப் பொருளாக மாற்றி பொருளாதார அபிவிருத்திக்கேற்றதாக மாற்றியமைக்கும் திட்டத்தை மும்பாயில் நகரசபை கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் கழிவுப்பொருட்களை உற்பத்திப் பொருளாக மாற்றுவதற்கு சில செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு மேற்கொள்வதற்கு மக்கள் பங்களிப்புடன் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலமே திறம்பட செயற்படுத்த முடியும். என்பதே அடிப்படைக் கருத்தாகும்.

இதற்கு உதாரணமாக மும்பாயில் கோல்டன் கார்டின் என்னுமிடத்தில் வசிக்கும் குடும்பங்கள் தாங்களாகவே கிராமிய அமைப்பு ஒன்றை உருவாக்கி அக்கிராமத்தின் கழிவகற்றல், சுகாதாரம் ஆகிய அத்தியாவசியத் தேவைகளை கவனித்துக் கொள்கின்றன. வீதி அபிவிருத்தி சுற்றாடல், சுகாதாரம் ஆகிய வற்றுக்கு நாளாந்தம் ரூபா ஒன்று செலுத்தி பங்களிப்புச் செய்கின் றனர். இவ்வாறு எமது பகுதிகளிலும் மேற்கொள்ளப்

**நேர்காணல்**
**சோதி,குகன்**

பட்டால் எமது நகரக் கழிவுகளை உற்பத்திப் பொருளாகவும் இயற்கை உரங்களாகவும் பெற்றுக்கொள்வதுடன் நகரத்தையும் சுத்தமாக பேணிக்கொள்ளலாம்.

சனத்தொகை வளர்ச்சி. புதிய நகராக்கம் என்பன கழிவுப் பொருட்கள் அதிகரிப்பதற்கு காரணமாகின்றன. 85% மான சனத்தொகை, கழிவுற்பத்தி யென்பன முதற்தரமான நகரங்களிலேயே காணப்படுகின் றன.

நகர கழிவகற்றல் முகாமைத்துவத்திற்கு முதலாவதாக மதிப்பீடும் ஆய்வும் அவசியமானதாகின்றது. பின்பு கழிவுகளை பிரித்தெடுத்து களஞ்சியப்படுத்தல் அவசியமாகின்றது. ஆரம்ப இரண்டாந் தர சேமிப்பு மாற்றம், ஏற்றுமதி செய்தல் என்பனவும் இச் செயற்பாடுகளை பன்முகப்படுத்தி செயற்படுத்துவதுடன் மத்தியப்படுத்தி கிருமியழித்து அதனை அகற்ற நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

தற்போதைய நிலைமையில் கழிவகற்றல் முகாமைத்துவ உள்ளூராட்சி அமைப்புக்களினது. பொறுப்பாகும். கழிவுகள் பொது மக்களின் சொத்தாகும். இம் முகாமைத்துவத்தினை திணைக்கள வேலைப்படையினைக் கொண்டு செயற்படுத்துவது மிகவும் அவசியமானது. 80 வீதமான செலவுகள் கழிவுகளைக் கொண்டு செல்வதற்கான செலவாகவும். விஞ்ஞான முறையாக வகைப்படுத்தலிலும் அகற்றுதலிலும் செயற்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கழிவகற்றல் முகாமைத்துவம் சம்பந்தமான சட்ட ரீதியான நடவடிக்கைகளை இயற்றி அமுல் செய்வது மிகவும் அவசியமானதாகும் என்றார்.

மேற் கூறப்பட்ட நடவடிக்கைகள் எமது பகுதிகளில் செயற்படுத்தப்படுவது சாத்தியப்பாடாகுமா? அத்தோடு எமது பிரதேசத்திற்கு பயனென்ன என்று கேட்டபோது: எமது பகுதியிலும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் குப்பைகள் என்பவற்றை இயற்கை உரங்களாக பயன்படுத்துவது ஒரு புறமிருக்க எமது நகரத்தை சுத்தமாகப் பேணவும் உதவும். மற்றும் எமது பகுதியில் விவசாயிகள் மிகவும் பயன் பெறமுடியும்.

இவற்றினை எப்படி நடைமுறைப்படுத்தலாம் எனக் கேட்ட போது தேவையான இயந்திரங்களை அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மக்களுடைய ஒத்துழைப்புடனும், அரசினூடாக வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினுடைய உதவியுடனும் இதில் வெற்றி காணலாம் ஏனெனில் எமது பகுதி விவசாய நிலங்களாக இருப்பதால் எமது அழிந்த பிரதேசத்தை மீண்டும் நாம் கட்டியெழுப்பி வரும் இவ் வேளையில் இப்போதே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வந்தால் சனத்தொகை பெருகிக்கொண்டு சென்றாலும் நகர சூழல் முகாமைத்துவத்தைப் பேண முடியும்.

மேலும் வறிய மக்களிற்கு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் ஓர் நடவடிக்கையாகவும் அதன் மூலம் அவர்களது பொருளாதார வளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிலையும் ஏற்படும். குறிப்பாக ஒரு தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுகள் மீண்டும் அதே தொழிற்சாலைக்கு ஒரு உற்பத்தி பொருளாக மாற்றம் பெறுகின்றது. என்றும் குறிப்பிட்டார் இதன் அடிப்படைக் கருத்து "கழிவுகளும் ஒரு செல்வம் தான்" என்பதாகும்.

## ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஆதரவுடன் யாழ். மருத்துவபீட மாணவர்களினால் கிளிநொச்சி கரைச்சிபிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடத்து வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

மேற்படி பாடசாலைகளில் ஆண்டு 5இற்கு உட்பட்ட மாணவர்களிடையேயுள்ள சுகாதாரக் குறைபாடுகளைக் கண்டறியும் முகமாக எதிர்வரும் 20ஆம்,21ஆம்,22ஆம் திகதிகளில் பாடசாலைகளில் மேற்படி இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

கீழ்க் குறிப்பிட்டுள்ள பாடசாலை களில் மேற்குறிப்பிட்ட தினங்களில் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் இடம்பெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

கிளி/உருத்திரபுரம் ம.வி, கிளி/புனித பற்றிமா றோ.க.பாடசாலை, கிளி/இந்து ஆரம்பப் பாடசாலை, கிளி/அக்கராயன் ம.வி, கிளி/ஸ்கந்தபுரம் இல1, இல2 பாடசாலைகள், கிளி/யூனியன்குளம் அ.த.க.பாடசாலை, கிளி/அக்கராயன் கோணாவில் அ.த.க. பாடசாலை, கிளி/கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை, கிளி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம், கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலை, கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை. (சோ,கு)

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க தலைமைச் செயலக அடிக்கல் நாட்டல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைமை செயலக கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 நெடுஞ்சாலைக்கு அருகாமையில் கிளி. அரச அதிபரினால் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க தலைமை செயலகத்திற்கென வழங்கப்பெற்ற காணியில் அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு அடிக்கல் நாடடும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து இந்நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் சங்க பொது முகாமையாளர் அன்ரன்குபராஜ் வேண்டியுள்ளார். (சோ.கு)

## கால போக நெற்செய்கைக் கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குள் அமைந்திருக்கும் கைவேலி, ஆத்துப்புலவு நாவலடி, பாண்டியன் வெளி பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் 2004-2005 காலபோக நெற்ச் செய்கை பற்றிய முக்கிய கலந்துரையாடல் ஒன்று புதுக்குடியிருப்பு கமநல சேவை கேந்திர நிலையத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (08)

### குற்றச்சாட்டு

சிறிலங்கா சர்வதேச குற்றச் செயல்களின் மையமாக மாறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் சிறுவர் துஸ்பிரயோகம் போதைவஸ்து கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் என்பவற்றிக்கு சிறிலங்கா மையமாக விளங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதிரைப் பலகைகள் பொலிசாரால் மீட்பு

(மன்னார்)

மன்னார் முருங்கன் பகுதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை தனியார் பாரஊர்தி மூலம் ஏற்றி வந்த முதிரைப் பலகைகளை மன்னார் பொலிசார் அச்சுத் தொழிலகத்தில் வைத்து இறக்கும் சமயம் கைப்பற்றி யுள்ளனர்

இதனது மொத்தப் பெறுமதி 3 இலட்சம் ரூபாய் ஆகும். இதனை மன்னார் பொலிசார் நீதி மன்றத்திடம் ஒப்படைத்துள்ளனர். பாரஊர்தியை நீதிமன்றம் விடுவித்த போதிலும் பலகைகள் யாவும் நீதி மன்றத்தில் வைக்கப் பட்டுள்ளது.

இன்று இதனை ஏற்றி வந்தவரை நீதிமன்றத்திற்கு சமுகம் கொடுக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (மி)

## சீமெந்து தட்டுப்பாட்டை நிவர்த்திக்க வேண்டுகை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் கடந்த ஒரு வார காலமாக சீமெந்துக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதுடன் சில சீமெந்து வகைகள் முற்றாக இல்லாத நிலையை அவதானிக்க முடிகின்றது.

இதனால் இப்பிரதேசங்களில் இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகள் பாதிப்படைந்துள்ளதாக அறிய வந்துள்ளது.

மேலும் பொதுமக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு இக்கட்டான சூழ் நிலையிலும் உள்ளதையும் காண முடிகின்றது. எனவே சம்பந்தப் பட்டவர்கள் இவ்விடயத்தில கவனம் செலுத்த வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (08)

### பிற்போடல்

. உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இன்று பி.ப. 2.30 மணிக்கு இணைய மண்டபத்தில் நடைபெற இருந்த முக்கிய கலந்துரையாடல் மறுநாளான 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10.00 மணிக்கு இடம் பெறும் என்பதை சகல உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் முல்லை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வே.சிவனடியார் அறியத் தருகிறார் (08)

# இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டாம்

## -சிங்கள பேராசிரியர்கள் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டாமென்று தேசிய பல் கலைக்கழகப் பேராசிரியர்களின் கூட்டமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தேசிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கூட்டமைப்பு மாநாடு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பலதரப்பட்டவர்களிடமிருந்து வருகின்ற அழுத்தங்களுக்கு அரசாங்கம் அடி பணியக்கூடாதென்றும் இம்மாநாட்டின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தை இணைப்பது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்றும், தேசிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கூட்டமைப்பு கூறியுள்ளது.

இந்த மாநாட்டில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கம் படிப்படியாகத் தமது இலக்கை நோக்கிச் செல்வதாகவும் இங்கு கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் வகையில் தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இம்மாநாட்டில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டார்கள்.

# புலிகளின் இ.நி.யோசனைக்கு ஈடாக தமது யோசனைகளும் தயாராம்

## –முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது–

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்பித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைக்கு ஈடாக தமது கட்சியின் யோசனையும் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக் சூல்ஹெய்மை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த கட்சியின் செயலர் ஹசன் அலி, தாம் எரிக் சூல்ஹெய்மிடம் இந்த யோசனை குறித்து விளக்கமளித்ததாகவும்,கிழக்கில் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பாக விளக்கியதாகவும் குறிப்பிட்டார். சனாதிபதி பரிந்துரைத்துள்ள ஆலோசனைச் சபைத்திட்டத்தில் இணைவது குறித்தும் தாம் ஆலோசிப்பதாக அவர் குறிப்பிட்டார். ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் செயலர் டக்ளஸ் தேவானந்தாவையும் எரிக் சூல்ஹெய்ம் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினார் இதேவேளை அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவை எரிக்சூல் ஹெய்ம் நேற்று முன்தினம் இருமணி நேரம் சந்தித்துப் பேசியதாகவும் தெரியவருகிறது. (32)

# நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பான திஸாநாயக்க மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

நீதிமன்றத்தை அவமதித்ததான குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சமுர்தி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி திஸாநாயக்கவை நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தது. இதனை ஒரு வாரத்துக்குள் செலுத்தாவிட்டால் பிரதிவாதியான எஸ்.பி திஸாநாயக்க கைது செய்யப்பட்டு மன்றில் ஆஜர்செய்யப்படவேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. கடந்த நவம்பர் மாதம் உனவட்டுன பிரதேசத்தில் வைத்து உயர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துரைத்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

எஸ்.பி.திஸாநாயக்கவின் சார்பில் மன்றில் ஆஜராகி வாதாடிய அவரின் சட்டத்தரணி குறிப்பிட்ட கருத்து நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமையவில்லை என்றும், அவ்வாறெனின் அதற்காக அவர் மன்னிப்பு கோருதாகவும் தெரிவித்தார். எனினும் எஸ்.பி. திஸாநாயக்க நீதிமன்றத்தை அவமதிப்பதான கருத்து அடங்கிய ஒலி ஒளி படம் மன்றில் திரையிடப்பட செய்ததுடன், எந்த ஒரு நபரும் நீதிமன்ற நடவடிக்கைகளை அவதூறு செய்ய முடியாது என்ற சட்டவாக்கத்தை சுட்டிக்காட்டிய பிரதம நீதியரசர்,இதற்கு ஏன் தண்டனை வழங்கப்படக்கூடாது என்பதை பிரதிவாதி தரப்பு முன்வைக்க வேண்டும் என உத்தரவிட்டார். இதேவேளை இந்த வழக்கின் தீர்ப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது(32)

# விலைவாசி உயர்வுக்கு எதிராக ஐ.தே.க கொழும்பில் 24 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் 24 ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பு கோட்டையில் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. நாட்டில் விலையுயர்வுகள் மற்றும் நியமம் அற்ற பொருளாதாரக் கொள்கை என்பவற்றைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். இந்த ஆர்ப்பாட்டம் 24 ஆம் திகதிக்கு பின்னர் நாடாளாவிய ரீதியில் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முகமாக பல்வேறு காரணங்களைக் கூறிக் காலந்தாழ்த்தாமல் அரசாங்கம் உடனடியாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி தொடர்பாக பேச்சு நடத்த வேண்டும் பின்னர் அது தொடர்பாக பாராளுமன்றத்தில் தீர்வை அரசாங்கம் அறிவிக்கும் போது அதற்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவளிக்க தயாராக உள்ளதாக கூறிய அவர் அதனை விடச் சமாதானத்திற்காக எதிர்க்கட்சி என்ன செய்ய முடியும்? எனக் கேள்வி எழுப்பினார். அரசாங்கம் தற்சமயம நோர்வே அரசாங்கம் செய்து வரும் உதவிகளுக்கு நன்றி கூற வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர், நோர்வேயுடன் கருத்து முரண்பாடுகள் இருக்குமாயின் அதனைச் ஜனாதிபதி பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (32)

# திருமலைக்கு விஜயம்

சிறிலங்கா வந்துள்ள இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருன் பிரகாஷ் நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கும் அனுராதபுரத்துக்கும் விஜயம் செய்துள்ளார் இதன் போது சிறிலங்கா கடற்படையினரின் செயற்பாடுகள் குறித்தும் அவர்களுக்கு இந்திய கடற்படை ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பாகவும் அவர் கவனம் செலுத்தவுள்ளார். (32)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 28 - 11 - 1939

இறப்பு 17 - 08 - 2004

16.09.2004

குடும்பத்தின் குல விளக்கே...
அன்பிற்கு இலக்கணமே...
பாசத்தின் பிறப்பிடமே...
அம்மா என்றழைக்கும் தெய்வமே...
எம்மைத் தவிக்கவிட்டு
நீர் எங்கு சென்றீரோ?
ஓர் கூட்டுக்குருவிகளாய் நாம்
உந்தன்அரவணைப்பில்
ஓர் குறையின்றி ஒற்றுமையாய்
ஒன்றுபட்டு வாழ்ந்திருந்தோம்...
குஞ்சுகளைத்தவிக்கவிட்டு,
அன்னப்பறவையாக நீ எங்கு பறந்தீரோ?
அம்மா... எம் செல்வமே...
உந்தன் மடி மீது எங்கள் தலைவைத்து
துன்பங்கள் நீங்கிய காலங்கள்
எங்கள் கண்களை மல்கச் செய்கின்றதே...
எங்கள் துயர் தீர்க்க எம் நெஞ்சக் குறைசொல்ல
யாரிடம் செல்வோம் தாயே! எம்தாயே...!!
எங்கள் நெஞ்சுப் பானைகளிலே...
உங்களின் நினைவலைகள்
நின்று நிலைக்கும் அம்மா.
தங்கக் குணவதியே... எம் தாயே...
உங்கள் நினைப்புகளுடன் நாம்
எங்கள் வாழ்வைச் செலுத்துகின்றோம்...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அமரர்

## திருமதி தெய்வமணி இளையதம்பி

அன்புடையீர்!

எதிர்வரும் 16.09.2004 அன்று எமது குடும்ப விளக்கு அமரர் தெய்வமணி இளையதம்பி அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

நிரந்தர முகவரி:- வேம்படி,வடமராட்சி கிழக்கு.
தற்போதைய முகவரி:-நிகல்யா புடவையகம் விசுவமடுச்சந்தி, விசுவமடு.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(5103)

# மராட்டிய மாநில சட்டசபைத் தேர்தலில் பாரதிய ஜனதாவுடன் கூட்டணி இல்லை

## - ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

(பெங்களூர்)

மராட்டிய மாநில சட்டசபை தேர்தலில் பாரதிய ஜனதாக்கட்சியுடன் கூட்டணி இல்லை என்று ஐக்கிய ஜனதாத்தளக் கட்சியின் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அறிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று முன்தினம் பெங்களூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். இந்திய நிதி நிலை மிகவும் மோசமாக உள்ளது. பணவீக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்த நிலையில் இந்திய திட்ட வளர்ச்சிகளில் அமெரிக்காவைச் சேர்ந்த 'மிக்கின்சி' என்ற முகவர் தலையிட்டு உள்ளது.

இந்த முகவர் இந்தியப் பொருளாதாரத்தில் தலையிடுவதன் மூலம் இந்திய நலன் பறிபோகும் நிலை உள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் முதற்தடவையாக இந்த வெளிநாட்டு முகவர் தலையிட்டு உள்ளது. இந்த முகவர் இந்தியத் திட்ட கமிஷனுக்கு அறிக்கை ஒன்றையும் கொடுத்துள்ளது. அதன்படி மத்திய, மாநில அரசின் பொது நிறுவனங்களை தனியார் மயமாக்கும் நோக்கோடு அந்த முகவர் அறிக்கை கொடுத்துள்ளது அந்த வெளிநாட்டு முகவர் கொடுத்துள்ள அறிக்கையில் உள்ள தொழிலாளர் சீர்திருத்தம், மின்சாரத் துறையை தனியார்மயமாக்குதல், நேரடி வெளிநாட்டு முதலீடு போன்றவைகள் நமது நாட்டின் நலனைப் பலமாகக் காயப்படுத்திவிடும் என்றார்.

# மராட்டிய சட்டசபைத் தேர்தல் சோனியாவுடன் சரத்பவார் சந்திப்பு

## -தேர்தல் கூட்டணி பற்றிப் பேச்சு

(புதுடில்லி)

மராட்டிய சட்டசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டதால் தேர்தல் கூட்டணி பற்றிச் சோனியா காந்தியுடன்சரத்பவார் சந்தித்துப் பேசியுள்ளார்.

மராட்டிய மாநில சட்டசபைக்கு அடுத்த(ஒக்ரோபர்) மாதம் 13ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. மராட்டிய சட்டசபையில் 288 தொகுதிகள் இருக்கின்றன. மராட்டிய மாநிலத்தில் தற்போது காங்கிரஸ்-தேசியவாத காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது. சிவசேனா பாரதிய ஜனதா கூட்டணி எதிர்க்கட்சி அணியாக உள்ளது.

## வை.கோ.விடுதலை

(சென்னை)

பொலிசாரின் தடை உத்தரரை மீறியதற்காக நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்ட வை.கோ உட்பட ஆறு ம.தி.மு.க. தொண்டர்களும் விடுதலைசெய்யப்பட்டனர். மதி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ வின் 1025 கி.மீற்றர் நடைப்பயணத் தின் நிறைவு விழா சென்னை தீவுதிடலில் நடைபெறுவதாக இருந்தது.

## எதிரிகளாக நினைக்க மாட்டேன்

### -மன்மோகன்சிங்

நான் எதிர்க்கட்சிகளை எதிர்க் கட்சிகளாக நினைக்க மாட்டேன் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆனால் எதிர்க்கட்சியில் அத்வானி வாஜ்பாய் போன்ற சிறந்த தலைவர்கள் இருந்தும் எதிர்கட்சிகளால் நாடாளுமன்றத்தை நடத்தவிடாமல் போனதற்கு வருத்தம் தெரிவித்தார்.

நாட்டின் பிரச்சினை பற்றி சிந்திப்பதும், ஒருவர் மீது ஒருவர் பழி சொல்லாமல் இருப்பதும் அரசியலில் மிகவும் முக்கியமானது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கிலானியின் அரசியல்செயலர் சுட்டுக்கொலை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் ஹுரியத் தலைவர்களில் ஒருவரான சையத் அலிஷா கிலானியின் அரசியல் செயலர் பர் ஹிசாமுதீன் அடையாளம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ஹிசாமுதீனின் வீட்டிற்குள் நுழைந்த சிலர் அவரைச் சரிபாதியாகச் சுட்டதாகவும் இதில் அவர் அதே இடத்தில் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று-ஜெயபுரம்

வழ /இல11 9/2004
தன்மை:மணநீக்கம்

வழக்காளி:-
சந்திரகுமார் புவனேஸ்வரி
ஜெயபுரம், பல்லவராயன்கட்டு

எதிராளி:-
சுப்பையா சந்திரகுமார்
கோவிந்தன்கடைச்சந்தி அருகாமை
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

### பகிரங்க அறிவித்தல்

*மேற்படி எதிராளிக்கு,*

மேற்குறித்த வழக்கினை, வழக்காளி,இந்நீதிமன்றில், உமக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளார்.

உமக்கான அழைப்புக்கட்டளை முறை நிறைவேற்றுனர் மூலம் சேர்ப்பிக்க முயன்ற போது, நீர் அம்முகவரியில் இல்லாமையினால் உமக்குரிய அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்க முடியவில்லை. எனவே, நீரோ அல்லது உமது நலனில் அக்கறையுடையவரோ, இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகிய அன்றில் இருந்து 14 நாட்களுக்குள் ஏதும் சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்காதுவிடும் இடத்து இவ் அறிவித்தலை நீவீர் ஏற்றதாகவே கொள்ளப்படுவீர் என்றும் உமக்கு எதிராக ஒருமுகவிளக்கம் மேற்கொள்ளப்பட்டு தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இதனால் உமக்கு அறியத்தரப்படுகின்றது.

இந்த 2004 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ஆம் திகதி
"மன்றின் கட்டளைப்படி"

அ.கேதீஸ்வரன்,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
மன்னார்,
ஜெயபுரம்.

வரைபு:-
வழக்காளி சட்டவாளர்
(செல்வி தயாநிதி சுப்பிரமணியம்)
வன்னேரிக்குளம் கிளிநொச்சி.

(5107)

## 31 ஆம் நாள் நினைஞ்வசலி

தோற்றம்
24 - 04 - 1925



மறைவு
17 - 08 - 2004

### விசுவலிங்கம் நடராசா

(ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்)
151,திருமகள் வீதி,அரியாலை,யாழ்ப்பாணம்)

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த
உம் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

16.09.2004 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நாள் நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தற்காலிக முகவரி,
288,ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர்

(5108)

## கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

எமது சங்கத்திற்கு சொந்தமான கோணாவில் பகுதியில் அமைந்துள்ள

01) 10ஏக்கர் விஸ்தீரணமுள்ள வயற்காணி,இல,55, அக்கராயன்குளம், கோணாவில். (பயன்தரக் கூடிய 75 தென்னைமரங்கள் அடங்கலாக)

02) மேட்டுக்காணி,இல,87,அக்கராயன்குளம்,கோணாவில். (பயன்தரு தென்னை, மா,பலா,தோடை போன்றன அடங்கலாக)

இரண்டு காணிகளும் மூன்றுவருட ஒப்பந்த அடிப்படையில் எதிர்வரும் 25.09.2004ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு இல.87, அக்கராயன்குளம், கோணாவில் என்னும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு விடப்படும்.

ஏலம் கோருபவர் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 150 /= செலுத்த வேண்டும்.

மேலதிக தகவல் பெற விரும்புவோர் ஏ-09 வீதி ,கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது குறித்த மேட்டுக்காணியில் 18.09.2004 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

ப. இராமச்சந்திரன்,
தலைவர்,
கிளி/ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

[சீ.10223]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
05 - 01 - 1973



தாயக மண்ணில்
17 - 09 - 2000

### கப்டன் மலர்னி

பத்மநாதன் லதாரஞ்சினி

ஆண்டு நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
விடுதலைக்கு வித்திட்டு சென்றவளே,
நீண்ட தூரம் நீ சென்றாலும்
எம்மை விட்டு நீங்கவில்லை உன் மலர் முகம்
எம் கண்களில் நீரோ வற்றவில்லை
எம்நெஞ்சில் உன் நினைவு
என்றுமே அழியாது.

17.09.2004 வெள்ளிக்கிழமை அன்று அம்பலப்பெருமாள் சந்தியில் (ஸரூடியோ) அமைந்துள்ள ரூபனின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:-
ஸ்ரூடியோ,
அம்பலப்பெருமாள்சந்தி,

தகவல்:-
அம்மா, ஐயா, தம்பி
சகோதரிகள்,
மைத்துனர்மார்,
பெறாமக்கள்.

(5047)

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 International Cricket Council ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 International Cricket Council

# 138 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மே.தீவு தொடரிலிருந்து வெளியேறியது பங்களாதேஷ்





ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத்துக்காக றோஸ் பவல் மைதானத்தில் நேற்று நடைபெற்ற 8ஆவது லீக் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்த்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 138 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி மேற்கிந்தியத்தீவை துடுப்பெடுத்தாட அழைத்தது.

முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவு மிகச் சிறப்பாக ஆடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முதலாவது விக்கெட் அணியின் எண்ணிக்கை 192 ஆக இருக்கும்போது இழக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் கிறிஸ் கைல்ஸ் 99 ஓட்டங்களையும், வெவல் ஹெய்ன்ஸ் 82 ஓட்டங்களையும், சர்வான் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றனர். லாறா 20 ஓட்டங்களைப் பெற்றபோது ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் பைசியா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



பதிலுக்கு கடினமான வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பங்களாதேஷ் அணி 39.3 ஓவரில் 131 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அகமட் 21 ஓட்டங்களையும், ரஹ்மான் 21 ஓட்டங்களையும் மகமூட் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் டிலான் 29 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கிறிஸ் ஹைல்ஸ் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக கிறிஸ் ஹைல்ஸ் தெரிவானார்.

# சுழற்பந்து வீச்சில் சுருண்டது கென்யா

## பாகிஸ்தானுக்கு 7 விக்கெட் வெற்றி

ஐ.சி.சி. மினி உலகக் கிண்ணத்துக்கான 7ஆவது லீக் போட்டியில் கென்ய அணியை எதிர்த்தாடிய பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

எட்பாஸ்ரன் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் உல -ஹக் கென்யாவை துடுப்பெடுத்தாட அழைத்தார்.



முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா 32 ஓவர்கள் நிறைவில் 94 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

முன்னதாக வேகப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சைச் சமாளித்து ஆடி ஓட்டங்களைக் குவித்த கென்யா சுழற்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.



துடுப்பாட்டத்தில் ஒட்டினோ 33 ஓட்டங்களையும், ஓமா 23 ஓட்டங்களையும், மோடி ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் 6 ஓவர்கள் பந்து வீசிய அப்ரிடி 11 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், சொலை மாலிக் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இலகுவான வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் 18.4 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. பந்து வீச்சில் எக்கா 2 விக்கெட்டுக்களையும், சுஜி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவானார்.




## புறக்கணிப்பு

பாகிஸ்தானில் வரும் டிசம்பரில் நடைபெறும் சம்பியன்ஸ் கோப்பை ஹொக்கிப் போட்டியில் அவுஸ்திரேலியா பங்கேற்பது குறித்து நிச்சயமற்ற நிலை உருவாகியுள்ளது. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இப்போட்டியில் பங்கேற்க தயக்கம் காட்டி வந்துள்ளது எதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றது அவுஸ்திரேலியா தற்போது அதிகரித்து வரும் தீவிரவாதச் செயல்களை அடுத்து இப்போட்டியிலிருந்து விலகுவது குறித்து அவுஸ்திரேலியா சிந்தித்து வருவதாக அவுஸ்திரேலியா ஹொக்கி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.



# அரையிறுதிக்கான போட்டிகள் ஆரம்பம் அவுஸ்.நியூசிலாந்து இன்று பலப்பரீட்சை



ஐ.சி.சி.சம்பியன்கிண்ண போட்டியின் 9 ஆவது லீக் ஆட்டம் ஓவல் மைதானத்தில இன்று ஆரம்பமாகின்றது. இதில் ஏ பிரிவிலுள்ள உலக சம்பியனான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இரு அணிகளுமே அமெரிக்காவை படுதோல்வியடையச் செய்தவை இதனால் இன்றைய ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெறுகிறதோ அந்த அணி அரை இறுதிக்கு தகுதி பெறும்.

அவுஸ்திரேலியாவிற்கு எல்லா வகையிலும் நியூசிலாந்து சவாலாக விளையாடும் என்று தெரிகிறது. இதனால் இந்தப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும்.

அமெரிக்காவிற்கு எதிரான ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் பந்தவீச்சு அனல் பறக்கும் வகையில் இருந்தது. இதேபோல் நியூசிலாந்து அணி அமெரிக்காவுக்கு எதிராக துடுப்பாட்டத்தில் சாதித்து இருந்தது.

அவுஸ்திரேலியா அணியில் இன்றைய ஆட்டத்தில் பிரட்லீ அல்லது மெக்ராத் நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரு அணிகளும் இன்று மோதுவது 90 ஆவது முறையாகும். இதுவரை நடந்த 89 ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 61 போட்டியிலும். நியூசிலாந்து 25 போட்டியிலும் வெற்றி பெற்றன. 3 ஆட்டம் முடிவு இல்லை.

3 முறை உலக கோப்பையை வென்ற அவுஸ்திரேலியா இது வரை ஐ.சி.சி.கோப்பை போட்டியில் சம்பியன் பட்டம் பெற்றதில்லை. இதனால் இன்றைய ஆட்டத்தில் அந்த அணி வீரர்கள் வெற்றிக்காக கடுமையாக போராடுவார்கள் என எதி பார்க்கப்படுகிறது.

## அர்ஜுனா விருது

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடும் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய வீரர் மேஜர் ராஜ்ய வர்தன் சிங் ரதோருக்கு 2003 ஆம் ஆண்டுக்கான அர்ஜுனா விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், நீளம் தாண்டும் வீராங்கனை அஞ்சு ஜோர்ஜுக்கு ராஜீவ் கேல் ரத்னா விருது வழங்கப்படுகிறது.

அஞ்சுவின் கணவர் பாபி ஜோர்ஜுக்கு துரோணாச்சார்யா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாலாஜிக்குப் பதில் பண்டாரியை ஐ.சி.சி அங்கீகரித்தது



வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக தமிழக வீரர் பாலாஜி மினி உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இருந்து ஏற்கனவே விலகினார். அவருக்கு பதிலாக டில்லியைச் சேர்ந்த அமித் பண்டாரி அணியில் சேர்க்கப்பட்டு இருந்தார்.

இந்த நிலையில் அமித் பண்டாரியை தேர்வு செய்ததற்கான அனுமதியை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் இந்திய கிரிக்கெட் சபை கேட்டிருந்தது. இதற்கிடையில் பாலாஜிக்குப் பதிலாக பண்டாரி தேர்வு செய்யப்பட்டதை ஐ.சி.சி யின் தொழில் நுட்பக்குழு அனுமதித்துள்ளது. பண்டாரி ஏற்கனவே இங்கிலாந்து சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டால்மியா மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



இந்திய கிரிக்கெட் சபையின் தலைமை போசகராக டால்மியா தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதை எதிர்த்து போபால் கிரிக்கெட் சங்க உறுப்பினர் யோகேஷ் கத்தா தனது வக்கீல் அஜய்குப்தா மூலம் போபால் சிவில் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து உள்ளார். அதில் அவர் நீதிமன்றம் விதித்த கட்டுப்பாட்டை மீறி டால்மியா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இது நீதிமன்ற அவமதிப்பாகும். இதற்குத் துணை போன கிரிக்கெட்சபை நிர்வாகிகளை கைது செய்வதுடன், சபை சொத்துகள் பறிமுதல் செய்யவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இதனை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதி நிகாம் விசாரணையைத் ஒத்தி வைத்தார்.

# ஜேர்மனிக்கு சுற்றுலா மேற்கொண்டிருந்த சிறிலங்கா கரப்பந்தாட்ட அணி தலைமறைவு



சிறிலங்கா ஜேர்மனிக்கு இடையிலான விளையாட்டு பரிமாற்றத்திட்டத்தின் கீழ் ஜேர்மனிக்குச் சென்ற சிறிலங்காக் கரப்பந்தாட்டக் குழு உறுப்பினர்கள் மற்றும் குழுவின் பயிற்சியாளர், நிர்வாகி உட்பட அனைவரும் தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் காணாமற் போனது தமக்குப் புதிராக இருப்பதாக ஜேர்மனியின் விளையாட்டுத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை குழுவின் பயிற்றுவிப்பாளர், நிர்வாகி உட்பட 23 பேரும் காணாமற் போய் விட்டதாக இந்தத்திட்டத்தை ஏற்பாடு செய்த அதிகாரி கூறியுள்ளார்.

காணாமற் போன இந்த சிறிலங்காவின் கரப்பந்தாட்டக் குழுவினர் தமது அழுக்குத் துணிகளை மட்டுமே ஜேர்மனியில் விட்டுச் சென்றுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# புதிய செயலகம் திறந்து வைக்கப்பட்டது



முல்லை மாவட்டத்திற்கான விளையாட்டுத்துறைச் செயலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. முல்லை மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கமல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (20)

# மேஜர் ஈழப்பிரியா நினைவாக முல்லையில் கராத்தேப் போட்டி

முல்லைத்தீவு மாவட்டத்ததிற் குட்பட்ட கராத்தே வீரர்களுக்கான தெரிவுப்போட்டி எதிர்வரும் 24,25 ஆம் திகதி ஆகிய நாட்களில் காலை 9.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளதாக முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப் பாளர் திரு.கமல் தெரிவித்தார்.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புபவர்கள் புதுக்குடியிருப் பில் அமைந்துள்ள நுண்கலைக் கல்லூரியில் பதிவுகளை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றார்.

இப்போட்டியில் தெரிவு செய் யப்படுகின்ற வீர வீராங்கனைகள் மட்டுமே மேஜர் ஈழப்பிரியா நினைவாக விளையாட்டுத்துறையினர் வருடாந்தம் நடாத்தும் கராத்தேச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். *

(20)

சிந்தனைக்கு



சமூக மாற்றத்திற்கு முதற் படியாக சமூக விழிப்புணர்வு அவசியம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 16-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# அம்பாறையில் புதிய சோதனைச்சாவடிகள் அமைப்பு

## பாதுகாப்பிற்கு விசேட அதிரடிப்படை அழைப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் பெரும்பாலான பிரதேசங்களில் தற்போது புதிய சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சந்தேகத்திற்கிடமான வாகனங்களும்,நபர்களும் சோதனையிடப்பட்டு வருவதாக அம்பாறைப் பிரிவிற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த லெமன்கம கூறியுள்ளார்.

குற்றச்செயல்களைத் தடுக்கும் முகமாக 24 மணிநேரரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு விசேட அதிரடிப்படையினரின் பூரண ஒத்துழைப்பு பெறப்படுவதாகவும் பொலிசார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கல்முனை தலைமைப் பொலிஸ் நிலையத்தற்கு உட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோத ஆயுதங்களும்கஞ்சாத் தோட்டங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக கருதப்படுகின்றது.

# ஓட்டோவில் சென்றோர் துப்பாக்கிச் சூடு இரத்தினபுரியில் நேற்று இரு பொலிசார் பலி

(கொழும்பு)

இரத்தினபுரி,களப்பான பகுதியில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பொலிசார் உயிரிழந்துள்ளனர். இரவு நேரரோந்து நடவடிககையில் பொலிசார் ஈடுபட்டிருந்த வேளை சந்தேகத்திற்கு இடமான ஓட்டோவை சோதனையிட முற்பட்ட போதே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

ஓட்டோவில் இருந்த மூன்று ஆயுததாரிகளே இந்தத் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டிருக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் ஓட்டோவை விட்டு விட்டு தப்பிச் சென்று விட்டதாகக் கூறப்படுகின்றது.சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் துரிதகதியில் நடைபெறுவதாகவும் இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார்.

# மசகு எண்ணெய் இறக்குமதிக்கென சிறி. இற்கு கடன் வழங்க ஒபெக் முடிவு

மசகு எண்ணெய் உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கான கடன் உதவிகளைச் சிறிலங்காவுக்கு வழங்க ஒபெக் அமைப்பு தீர்மானித்துள்ளது. இதற்கென ஒஸ்திரியா மத்திய வங்கி அனுசரணை வழங்கும்.

நிதியமைச்சர் சரத் அமுனுகம அண்மையில் ஒஸ்திரியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது ஒபெக் அமைப்பின் பணிப்பாளர் நாயகத்தினைச் சந்தித்துரையாடிய போதே இந்தக்கடன் உதவி வழங்குவதென்று ஒபெக் அமைப்பு தீர்மானித்துள்ளது.

மசகு எண்ணெய் உற்பத்திகளின் இறக்குமதிகளுக்கு மேலதிகமாக நாட்டின் இயற்கையான மின் சக்தி நடவடிக்கைகளை ஊக்கிவிப்பதற்கு ஒபெக் அமைப்பு இணங்கியுள்ளதாக ஒஸ்திரியாவிற்கான சிறிலங்காத் தூதுவர் டி.எஸ் மென்டில் கூறியுள்ளார்.

ஐ.தே.க. பட்டியலில் தெரிவான-

# இ.தொ.கா. உறுப்பினர் இருவரும் ஐ.ம.சு. முன்னணியை ஆதரிப்பர்

(கொழும்பு)

உவா மாகாணசபையில் அங்கம வகிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவரும் ஐ.தே.க கட்சிபட்டியலில் தொிவாகியிருந்தாலும் ஐ.ம.சு கூட்ட மைப்பிற்கே ஆதரவு வழங்குவார்கள் எனக் காங்கிரஸ் கட்சி யின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார். மாகாண முதலமைச்சரை நேற்று முன்தினம் அவர் சந்தித்தவேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் சிகிச்சை முகாம்

(மன்னார்)

அண்மையில் மன்னாரில் வடக்கு கிழக்கு மாகாணகல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் கொழும்பு "சன் பிளவர் விலேச்" நிறுவனம் மன்னாரிற்கு வருகை தந்து மன்னார் மாவட்டத்திலுள்ள மாணவ மாணவிகளுக்கு இலவச கண் சிகிச்சை முகாமொன்றை நடத்தியது. இந்த நடமாடும் சேவையில் "சன் பிளவர்விலேச்" நிறுவன அதிகாரிகள், வைத்திய நிபுணர்கள், மாகாண கல்வி அதிகாரிகள் ஆகி யோர்கலந்து கொண்டனர்.

# "ஹொலிவூட் புத்தா" திரைப்பட இயக்குனர் உலக பௌத்தர்களிடம் மன்னிப்புக் கோரினார்

(கொழும்பு)

பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஹொலிவூட் புத்தா' என்ற திரைப்படத்தின் இயக்குனர் பௌத்தர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

இத்திரைப்படத்தின் இயக்குனரும், தயாரிப்பாளரும் பிரதம நடிகருமான பிலிப் கலன்ட் புத்தரை அவமதிப்பதாகச் சித்தரித்து வெளியிடப்பட்டுள்ள இத்திரைப் படத்தின் விளம்பர சுவரொட்டி உலகெங்குமுள்ள பௌத்தர்கள் மத்தியில் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருந்ததை அடுத்தே இம் மன்னிப்பைக் கோரியுள்ளார்.

புத்தரின் தலையின் மீதுகால் போட்டவாறு கலன்ட் உட்காந்திருப்பதாக அச்சுவரொட்டியில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது.

இது 'டிஜிற்றல்' கமராவின் வேலையென்றும், தான் ஒரு போதும் அவ்வாறு புத்தரின் தலை மீது உட்காரவில்லையென்றும் தெரிவித்திருக்கும் பிலிப் கலன்ட் இதன் மூலம் பௌத்தர்களின் மனதைப் புண்படுத்தியதற்காக அவர்களிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கோருவதாகக் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள பௌத்தர்கள் வசிக்கும் நாடுகளின் தூதரகங்கள் மூலம் கலன்ட் இம் மன்னிப்பை அந்தந்த நாட்டு பௌத்தர்களிடம் கோரியிருப்பதாக "டெய்லி நியூஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

ஹொலிவூட் புத்தா திரைப் படத்தைத் தடைசெய்யுமாறு கோரி உலகளாவிய ரீதியில் பௌத்தர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தமை தெரிந்ததே.

# 40 இலட்சம் தொழிலாளரிற்கான சேமலாபநிதி செலுத்தப்பட வில்லை

அமைச்சர் தகவல்

(கொழும்பு)

தனியார் துறையில் 60 இலட்சம் தொழிலாளர்கள் கடமை புரிகிறார்கள் எனவும், அவர்களில் 20 இலட்சம் தொழிலாளர்களின் சேமலாப நிதி செலுத்தப்பட்டுள்ளதாகவும், மிகுதி 40 இலட்சம் தொழிலாளர்களின் சேமலாபநிதி இதுவரை சேமலாபநிதி பிரிவுக்கு தொழில் அதிபர்கள் செலுத்தவில்லை. எனச் சிறிலங்காவின் தொழில் அமைச்சர் தெரிவித்தார். தற்பொழுது அரசாங்கம் இவர்களை இனம் கண்டு சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தொழில் அமைச்சர் அதாவுலா செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

# நியாயப் பாடான கோரிக்கை

யாழ். ஊடகவியலாளருக்கான நிதி மோசடி செய்யப்பட்டு வருவதைக் கண்டித்து யாழ். ஊடகவியலாளர் சங்கம் உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தப் போவதாக எச்சரிக்கை செய்துள்ளது. இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் யுனெஸ்கோ நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிதியால் யாழ். ஊடகவியலாளருக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்பதனைச் சுட்டிக் காட்டியுள்ளது.

இக்கடிதத்தில் எமக்கென ஒதுக்கப்பட்ட நிதி எமது பெயரில் மோசடி செய்யப்படுவதை யாழ். துணைவேந்தரும் அனுமதிக்கின்றார் என்றே தோன்றுகின்றது எனத் துணைவேந்தர் மீதும் தமது அதிருப்தியை இவ்ஊடகவியலாளர் சங்கம் வெளியிட்டுள்ளது. அத்தோடு, உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என ஆறு கோரிக்கைகளையும் அச்சங்கம் முன்வைத்துள்ளது.

ஊடகவியலாளர் சங்கத்தின் கோரிக்கைகள் நிறைவு செய்யப்படுமா? அன்றி ஊடகவியலாளர் சங்கம் போராட்டத்தில் குதிக்க வேண்டியதான நிலைவருமா? என்பவை ஒருபுறம் இருக்க, ஊடகவியலாளர்களின் கோரிக்கைகளில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால், இத்தகைய நிலை ஊடகத்துறைக்கு மட்டுமானதொன்றதல்ல. கல்வி மனிதநேய நடவடிக்கைகள் உட்பட பல துறைகளும் இத்தகையதொரு நிலையிலேயே காணப்படுகிறது.

பொதுவில் தமிழ் மக்களின் பெயரில் – யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் பெயரில் சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றால் ஒதுக்கப்படும் நிதிகளுக்கு இத்தகையதொரு நிலையே ஏற்படுகின்றது. அதாவது கிடைக்கப் பெறும் நிதி உதவிகள் பல வகையில் மோசடி செய்யப்படுவதாகவோ அன்றி மக்களை முழுதளவில் சென்றடைவதாகவோ இருப்பதில்லை என்பது வெளிப்படையானது.

இதில், முதலில் சுட்டிக்காட்டத்தக்கது இவை யாவற்றிற்கும் பொறுப்பாக வெளிநாட்டவர்கள் பெரும் சம்பளத்துடன் நியமனம் செய்யப்படுவதும், அவர்களுக்கான வசதிகள் பெரும் செலவில் மேற்கொள்ளப்படுவதும் ஆகும். இதனால் செலவிடப்படும், நிதி உதவியில் குறிப்பிடத்தக்க பங்கினை இவற்றிற்கான ஒதுக்கீடாக கொள்ளவேண்டியதாகி விடுகின்றது.

அடுத்ததாக, இவ் அரச சார்பற்ற நிறுவனங்களும், சர்வதேச நிறுவனங்களும் பெரும்பாலும் ஓய்வுபெற்றவர்களுக்கும் அரச சேவைகளில் உள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குமே வேலைவாய்ப்பை வழங்குகின்றன. இத்தகைய நிலைக்கு அவர்கள் நிர்வாகத்தில் ஏற்கனவே பெற்றிருந்த பயிற்சியும் மற்றும் தொடர்பாடலுக்கான ஆங்கில மொழியில் உள்ள தேர்ச்சியும் காரணமாகக் கொள்ளப்படுகின்றது.

அதாவது, சமூக ரீதியில் நெருக்கடிகளைச் சந்திப்போருக்கு உதவி வழங்கும் வழகையில் இவை செயற்படுத்துவதாக இல்லை. நிதியுதவியின் பெரும் பகுதி தேவையற்ற விதத்தில் பங்கிடப்பட்டதாகிவிடுகின்றது. உதவியின் பெரும் பயனை பாதிக்கப்பட்ட சமூகமோ, அன்றி வேலைவாய்ப்பிற்காகவும், வருமானத்திற்காகவும் ஏங்கி நிற்கும் இளைஞர் சமுதாயமோ பெற்றுக் கொள்வதாக இல்லை. சிற்றூழியர்களாலும், அபாயம் மிகுந்த வேலைகளில் பயன்படுத்தப்படுபவர்களாகவும் இளைஞர் கள் உள்ளனர். இத்தகைய போக்கானது, சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவப் போவதில்லை.

அத்தோடு, இவ் அமைப்புக்கள் சில வெளிநாடுகளில் பெறப்பட்ட அனுபவங்கள், நடைமுறைப்படுத்தப்பட்ட மாதிரிகள் என்பனவற்றை இங்கும் அவை பிரயோகிக்க முற்பட்டுள்ளன. ஆனால் அவை இங்குள்ள சமூக சூழலுக்கேற்ப அவை பொருத்தப் படானவையாக அமைவதில்லை. இதனால், மக்கள் அடையும் நன்மைகள் மிக மிக அற்பமாகவே உள்ளன. மாறாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பெயரால் வெளிநாட்டில் சிலரும், உள்நாட்டில் ஓய்வுபெற்ற சிலரும் பெரும் நன்மைகளை ஈட்டிக்கொள்கின்றனர்.

இதனைத் தவிர, பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யாமையும் காரணமாகும். எடுத்துக்காட்டாக, யாழ். பல்கலைக் கழகத்தில் ஊடகவியலாளர் பயிற்சி நெறியை நடாத்துபவர்களும், ஊடகவியலாளர் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் அநேகரும் ஊடகவியல் தொடர்பாக எத்தகைய அனுபவமும், இல்லாததோடு அதனுடன் தொடர்பு கொண்டவர்களா? என்பதும் கேள்விக்குரியதொன்றே.ஆகையினால், ஊடகவியலாளர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்படத்தக்கவையல்ல. குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கு ஒதுக்கப்பட்ட நிதி அவர்களுக்கே சென்று சேருதல் வேண்டும். அதன் பயனை அவர்களே அனுபவிக்க வேண்டும். அவ்வாறு இல்லாது போனால், அதனை மோசடி எனக் கூறுவதில் தவறில்லை.

உலகில் உள்ள சர்வதேச நிறுவனங்களும் சரி, அரச சார்பற்ற நிறுவனங்களும் சரி பாதிக்கப்பட்டவர்கள், பின்தங்கியவர்களுக்கான சேவை அறிவிப்புக்களுடன் அவை ஒரு நாட்டிற்குள், பிரதேசத்திற்குள் புகுந்து கொள்வதுண்டு. ஆனால், அவற்றின் முழுமையான நோக்கமும் சேவைதானா? என்ற கேள்வியும் இல்லாமல் இல்லை. வேறு சிலரின் தேவைகளுக்காகவும் இவை 'சேவை' செய்வதும உண்டு.

# இந்தியாவிடம் மற்றுமொரு போர்க்கப்பல் சிறிலங்கா கடற்படைக்குக் கொள்வனவு

## -முப்படைத்தளபதியாக பதவியேற்றபின் தயாசந்தகிரி



சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி சிறிலங்காவின் முப்படைகளின் தலைமை அதிகாரியாக நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவ் வைபவம் இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது. கடற்படைத் தளபதி ஒருவர் முப்படைகளின் தலைமை அதிகாரியாக பொறுப்பேற்றுக் கொண்டது இதுவே முதல் தடவையாகும். இதனை முன்னிட்டு இராணுவத் தலைமையகத்தில் முப்படைகளின் அணிவகுப்பும் இடம்பெற்றது. இவ் வைபவத்தில் விமானப்படைத் தளபதி, பதில் இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய தயாசாந்தகிரி வட-கிழக்கு பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வுகாண முடியாது. அத்துடன் நாட்டின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு போர் ஆற்றலை மேலும் வலுப்படுத்திக் கொள்வது முப்படைகளினதும் பொலிசாரினும் கடமையாகும இதே வேளை அரசின் சமாதான முயற்சிகளை வெற்றிபெற செய்வதற்காக முப்படைகளினதும், பொலிசாரினும் முழுமையான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அர்ப்பணிப்புடன் நடந்து கொள்ளப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடமிருந்து மற்றுமொரு உலங்கு வானூர்தி தாங்கு கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்ய இலங்கை கோரிக்கை விடுத்துள்ளதெனக் கூறிய அவர் இக்கோரிக்கையானது கடந்த மாதம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ புதுடில்லி சென்ற போது விடுக்கப்பட்டதாகவும், 150 மில்லியன் இந்தியக் கடனுதவி திட்டத்தின் கீழ் இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடற்படைக்கென தனியான விமானப் படையை உருவாக்கும் திட்டம் உள்ளதா எனக் கேட்டபோது,

தற்போதைக்கு இல்லை அதற்கான நிதிவசதி இலங்கையிடம் இல்லை. எனவே அந்தத் திட்டம் இப்போதைக்கு நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை. எனவும் கடற்படைத்தளபதி தயா சந்தகரி கூறினார். கடந்த 37 ஆண்டுகள் கடற்படையில் சேவையாற்றி வருவதுடன் 1993 வடபிராந்தியக் கடற்படைத் தளபதியாகவும், 1998 ஆம் ஆண்டு கடற்படையின் பிரதான அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டு இருந்தார். தற்போது முப்படைகளிலும் உள்ளவர்களில் சனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவராகவும், நம்பிக்கைக்கு உரியவராகவும் விடுதலைப் புலிகளுடன் கடும் போக்குடையவராகவும் தயா சந்தகிரி விளங்குவது குறிப்பிடத்தக்கது.

# மேஜர் செங்கோலின் தந்தையால் இசைக்கருவிகள் அன்பளிப்பு

இயக்கச்சிப் பிரதேசத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட செங்கோல் கலாமன்றத்தினருக்கு மேஜர் செங்கோலின் தந்தையார் 30,000/= பெறுமதியான இசைக்கருவி களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

நேற்றுக்காலை இயக்கச்சிப் பிரதேசத்தில் தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்ட மேஜர் செங்கோலின் தந்தையார் அப் பகுதி அரசியல்துறைப் பொறுப்பாளர் ரூபன் அவர்களிடம் கையளித்தார்.

முன்னதாக காலை 9.56 மணிக்கு தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வின் பொதுச்சுடரினை இயக்கச்சிப் பாடசாலை அதிபரும், செங்கோலின் தந்தையாரும் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி போராளி வரன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு செங்கோலின் தந்தையார் மலர் மாலை அணிவிக்க, மேஜர் செங்கோலின் திருவுருவப்படத்திற்கு செங்கோலின் தாயார் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து தியாகி லெப்டினன் கேணல் திலீபனின் ஞாபகார்த்த நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் நினைவுரைகளை பளைக் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளரும், சோரன்பற்று பாடசாலை ஆசிரியர் கோகுலராகவனும், முகாவில் பாடசாலை அதிபர் வ.ஜீவரத்தினம் அவர்களும், மாசார் பாடசாலை அதிபர் அம்பலவாணரும் இயக்கச்சி பாடசாலை அதிபர் இராசம்மா அவர்களும், பளை பிரதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைவரும் நிகழ்த்த, சிறப்புரையினை இயக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் ரூபன் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து மேஜர் செங்கோல் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட செங்கோல் கலாமன்றத்திற்கு செங்கோலின் தந்தையார் பொன்னுத்துரையும், அவரது தாயாரும் இசைக்கருவிகளை இயக்கச்சிப் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் ரூபனிடம் கையளித்தனர். மேஜர் செங்கோலின் தந்தையார் மாவீரர் குடும்பங்களின் நலனுக்காகவென மூன்று இலட்சம் ரூபா பணத்தினையும் கடந்தவாரம் அன்பளிப்புச் செய்துள்ள இதேவேளை ஆரம்பிக்கப்பட்ட கலாமன்றத்திற்கான அனைத்து இசைக்கருவிகளையும் இனிவரும் காலங்களில் வழங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ச,தீ)

# நிதி மேலாண்மையியற் கல்லூரி நேற்றுத் திறந்து வைப்பு

நிதித்துறையின் நிதி மேலாண்மையியற் கல்லூரி நேற்றுத் தொடங்கப்பட்டது. நிதித்துறை மனிதவள மேம்பாட்டுப் பகுதிப் பொறுப்பாளர் அன்புச்செல்வன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில், பொதுச்சுடரினைக் கணக்காய்வுப் பகுதிப் பொறுப்பாளர் மு.பாரி அவர்கள் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை சேரன வாணிபப் பணிப்பாளர் ந.இளம்பரிதி அவர்கள் ஏற்றிவைத்தார். கல்லூரிக்கட்டடத்தினைச் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்கள் திறந்துவைக்க, செயலகத்தினைத் தளஅமைப்புப் பகுதிப் பொறுப்பாளர் இ.மணிமாறன் அவர்கள் திறந்து வைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற தொடக்க விழா நிகழ்வில் மண்ட பத்தில் வைக்கப்பட்டிருந்த தியாகி திலீபன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு நிதிப்பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அவர்கள் மலர்மாலை அணிவித்தார். ஆசியுரையினை வடக்கு கிழக்கு மேம்பாட்டு நிறுவனத் தலைவர் திரு.தனபாலசிங்கம் அவர்களும் சிறப்புரையினைத் வெ.இளங்குமரன் அவர்களும் நன்றியுரையினைத் திரு.க.அறவாணன் அவர்களும் ஆற்றினர்.

இக்கல்லூரியில் ஐம்பத்து மூன்று (53) மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இவர்களுக்கான கல்விச் செலவுகள் அனைத்தும் நிதித்துறையாற் பொறுப்பேற்கப்படுவதுடன் மாணவர்களுக்கு மாதம் உரூபா நான்காயிரம் (4,000.00)உதவு தொகையாக வழங்கப்படவுள்ளது. மேலும் பயிற்சி நிறைவில் இவர்களுக்குப் பணியமர்த்தம் வழங்கப்படுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

### இந்தியத் தளபதி தலதா மாளிகைக்கு விஜயம்

இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் அருண பிரகாஸ் நேற்று கண்டிக்குச் சென்று தலதாமாளிகையைத் தரிசித்துள்ளார். இதன் பின்னர் அவர் அங்குள்ள உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்துக்கு விஜயம் செய்தார்.

### மின்சாரம்...

மின்சார விநியோகம் தடைப் படும் என மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

### தமிழ்...

தெரிவிக்கின்றன. இதனை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். ஏனெனில் இவ்வாறான நிதியுதவிகள் அமைதித்தீர்வைக் கேள்விக் குறியாக்கிவிடும்.

இராணுவத் தீர்வின் மீது ஆசை கொள்ளும் பேரினவாத அழுத்தங்கொண்ட சிறிலங்கா ஆட்சியாளர்கள் இந்நிதியினூடாக இராணுவப் பலத்தை அதிகரித்து மீண்டுமொரு போரைத் தமிழர் மீது திணிப்பர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களை இனப்படு கொலை செய்து அப்பட்டமான மனித உரிமைகளை மீறிய சிறிலங்கா அரசிற்கு சர்வதேச சமூகம் நிதியுதவி அளிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

தீர்வு இல்லாத சமாதானத்தை நாம் வெறுக்கின்றோம் இந்நிலை தொடருமானால் தமிழீழ விடுதலைப்புலிகளும், நாங்களும் இந்த சமாதானப்பாதையில் இருந்து விலகிப்போகும் தவிர்க்க முடியாத சூழ்நிலை உருவாகும். தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்கும் வரை சிறிலங்காவிற்கான நிதியுதவிகளைத் தங்கள் நாடோ அல்லது சர்வதேச நாடுகளோ வழங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தங்களிடம் வலியுறுத்தி வேண்டிக் கொள்கிறது. என அந்த மகஜரில் கேட்டுள்ளது.(33)

### வீரவணக்கம்...

போராளியே சாவடைந் தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்கின்றனர்.

# கொழும்பு துறைமுகத்தில் இந்திய யுத்தக் கப்பல்

இந்தியக் கடற்படைத்தளபதி அட்மிரல் அருண் பிரகாசின் விஜயத்தின் ஒரு கட்டமாக இந்திய போர்க் கப்பலான ஐ.எஸ்.எஸ்.கங்கா கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று வந்தடைந்துள்ளது.

130 மீற்றர் நீளமுடையதும் சுமார் 300 பணியாளர்களைக் கொண்ட இந்தக் கப்பலில் வான் தாக்குதல் எதிர்ப்பு ஆழ்கடல்வழி எதிர்ப்பு மற்றும் கடல் வழி எதிர்ப்பு போன்ற வசதிகள் இருப்பதாக இந்திய தூதுவராலயம் தெரிவித்துள்ளது. இந்தியத் இலங்கை கடற்படையின் ஒத்துழைப்புகளை மேம்படுத்தும் வகையில் வந்துள்ள இந்தக் கப்பல் சுமார மூவாயிரம் தொன் நிறையை கொண்டதாகும்.

# பெண்களைத் துப்பாக்கிகாட்டி மிரட்டிய ஈ.பி.டி.பி

மட்டக்களப்பு திமிலதீவுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை ஈ.பி.டி.பி.யினர் கிரைனைட் ஒன்றையும் துப்பாக்கியையும் கையில் வைத்துக் கொண்டு வீதியில் சென்ற பெண்களை மிரட்டியுள்ளார்கள்.

இவ்வாறு மிரட்டிய இக் காடையர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஒத்துழைக்குமாறு வற்புறுத்தியதாகவும், அவ்வீதியில் சைக்கிளில் சென்றவர்கள் சத்தம் கேட்டு அவ்விடம் வந்து விசாரித்ததால், அவர்கள் தப்பியோடிவிட்டதாகவும் பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. தற்போது இராணுவ முகாம்களில் ஒழிந்திருந்து தமிழினத் துரோகச் செயல்களில் ஈடுபட்டு வரும் தேசத்துரோகியான ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரே இத்தகைய இழிய செயலில் ஈடுபட்டதாக மட்டக்களப்புப் பெண்கள் சிலர் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்கள்

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு இளைஞன் விளக்க மறியலில்

## -கரவெட்டி-யாக்கரையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஒன்பது வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவிற்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் உள்ள யாக்கரை எனும் இடத்தைச்சேர்ந்த ஒன்பது வயதான பாடசாலை மாணவி ஒருவரை ஏமாற்றித் தனிமையான ஓர் இடத்திற்கு அழைத்துச்சென்று அவர் மீது பாலியல் வல்லுறவு புரிந்துள்ளதாகக் குற்றம் சாட்டியே அதேயூரைச் சேர்ந்த 26 வயது இளைஞனை கடந்த 11 ஆம் திகதி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பாலியல் வல்லுறவுச் சம்பவம் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றிருந்ததாலும் சம்பந்தப்பட்ட சிறுமி பெற்றோரிடம் கூற அஞ்சி சம்பவத்தை ரகசியமாக வைத்திருந்தார் எனினும் பாலியல் வல்லுறவுச் சம்பவத்தால் ஏற்பட்ட உடல் நிலைக் கோளாறினால் அவருக்கு அடிக்கடி மயக்கம் ஏற்பட்டதையடுத்து பிரஸ்தாப சிறுமியை வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்திய வேளையே அவர் மீது பாலியல் வல்லுறவு புரியப்பட்டமை தெரிந்தது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(33)

### மந்துவில்...

பொறுப்பாளர் புகழரசன் ஏற்றி வைத்தார். மலர் வணக்கத்தை மன்னகண்டல் கிராம சேவையாளர் நல்லையா அவர்கள் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து நினைவுரையை ஆனந்தபுரம் கிருஸ்ணர் ஆலய பிரதமகுரு அவர்களும் மந்துவில் கிராம சேவையாளர் கந்தசாமி அவர்களும் ஆற்றினர்.

சிறப்புரையைப் புதுக்குடியிருப்பு கோட்டப்பொறுப்பாளர் பிறையாளன் ஆற்றினார். 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற இப் படுகொலையில் 22 பேர் கொல்லப்பட்டும் பல பொதுமக்கள் படுகாயம் அடைந்ததும் குறிப்பிடத் தக்கது. (08)

### தீர்வு...

ஈடுபட்டு வருகின்றது. இதனால் அடுத்து வருவது போரா? சமாதானமா? என்ற நிலையில் மக்கள் குழம்பிப் போய் தமிழ் மக்கள் விரக்தியடைந்து போயுள்ளனர். சமாதான காலத்திலும் அரச படைகள் மேற்கொண்டு வரும் பாதுகாப்புக் கெடுபிடிகள், பலப்படுத்தல் நடவடிக்கைகள் என்பன மக்கள் மத்தியில் மீண்டும் ஓர் யுத்த பீதியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே தமிழ் மக்கள் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படாதிருப்பதையும், இயல்பு வாழ்வைத் தரக் கூடியதுமான தீர்வுகளுடன் சமாதானப் பேச்சுக்கள் தொடரப்படல் வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றனர் என்றார்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் ஆகியோர் அடங்கிய நோர்வே நாட்டுத் தூதுக்குழு ஒன்று நேற்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளது.

சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து யாழ்.குடாநாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக யாழ்.குடாநாட்டிற்கு வருகை தந்த இக்குழு பலாலிப் படைத்தளத்தில் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உள்ளிட்ட படையதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதுடன்; மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையப் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் ஆகியோரைத் தனித்தனியே சந்தித்துப் பேசினர்.

(33),(27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.